Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி31 வியாழக்கிழமை (16-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:263

# புலிகளின் தலைவர்களை இலங்கை அமைச்சர் சந்தித்ததாக வெளியான செய்திக்கு மறுப்பு!

கடந்த திங்கட்கிழமை புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மடுத் திருப்பதிக்குச் சென்ற இலங்கை அரசின் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அங்கு விடுதலைப் புலிகளின் பிரதேச மட்டத் தலைவர்களைச் சந்தித்ததாக வெளியான செய்திகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்திருக்கின்றனர்.

"மடுத் திருப்பதிக்கு யாத்திரை செல்வதற்காக எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்த அமைச்சருக்கு பாதுகாப்பு வழங்கிய எமது எல்லைக் காவல் படையினரையே அவர் சந்தித்திருக்கின்றார். அவர்களின் பங்கு பணி மற்றும் தர நிலைகளை அமைச்சர் தவறாகப் புரிந்து கொண்டு விட்டார் போலும்" - என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இணையத் தளம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

"பல அரசியல் பிரச்சினைகளை எதிர்நோக்கும் அரசாங்கம் ஒன்றின் அமைச்சரான பெர்னாண்டோபுள்ளே புலிகளின் தலைவர்களைச் சந்தித்ததான - புதிர் மிக்க - தமது கூற்றின் மூலம் சமாதானம் பற்றிய தவறான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளமை வருத்தத்துக்குரியது. இந்தத் தகவலுக்கு சர்வதேச தொடர்பு சாதனங்களில் வழங்கப்பட்ட முக்கியத்துவமும் நியாயமற்ற வகையில் நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டது."- என்றும் பாலசிங்கம் குறிப்பிட்டார்.

புலிகளின் மறுப்பின் பின்னர், அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே நேற்று ரி.பி.ஸி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்ததாவது:-

ஒரு கிறிஸ்தவ அமைச்சர் என்ற முறையிலேயே நான் மடுத் திருப்பதிக்குச் சென்றேன். எனக்கு அங்கு புலிகள் உரிய பாதுகாப்பை வழங்கினர். நான் அங்கு புலிகளின் உயர் மட்டத் தலைவர்கள் எவரையும் சந்திக்கவில்லை. பிராந்தியத் தலைவர்களைத்தான் சந்தித்தேன். இது விடயத்தில் செய்தி ஊடகங்களில் அளவுக்கு மீறி நம்பிக்கை தரும் செய்திகள் வெளியானது தவறானதாகும் - என்றார். (உ-4)

## தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பது பற்றிய

# ஜனாதிபதியின் முடிவு இன்று அல்லது நாளை?

## வெளியிடப்படலாம் என எதிர்பார்ப்பு

கொழும்பு,ஓகஸ்ட் 16

**பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்ததை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கான தீர்வு பற்றிய தமது முடிவை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று அல்லது நாளை வெளியிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

★ தற்போதைய அரசு, 'தகுதி காண்' அரசு என்ற நிலையில் மேலும் ஒரு வருட காலத்துக்கு ஆட்சியைத் தொடர்வதற்கு, நிபந்தனைகளோடு ஜே.வி.பி. வழங்கும் ஆதரவை ஏற்பது -

★ பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசு அமைப்பது -

★ செப்ரெம்பர் 7ஆம் திகதிக்குப் பின்னர் மீண்டும் ஒரு தவணைக்கு நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து, பின்னர், ஒக்ரோபர் 10 ஆம் திகதியின் பின், நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடுவது -

போன்ற பல்வேறு யோசனைகள், தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வாக ஜனாதிபதியின் முன் வைக்கப்பட்டுள்ளன என்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர்த் தேர் நாளை

யாழ்ப்பாணம்,ஓக.16

நல்லூர் கந்தசுவாமி கோயில் இரதோற்சவம் நாளையாகும்.

நாளை காலை 6 மணிக்கு (பழைய நேரப்படி) வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து காலை 7.30

(12ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச்சூட்டில் காயம்

நேற்று முன்தினம் இரவு 8மணியளவில் வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சின்னையா தம்பிராஜா (வயது 54) என்ற சிவிலியன் காயமடைந்தார்.

இவர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-164)

## மட்டு - அம்பாறை எல்லையில் ஆறு தமிழரைக் காணவில்லை!

மட்டக்களப்பு,ஓக.16

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லையில் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஆறு தமிழரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார். எனினும் நேற்றிரவு வரை எந்தவிதத் தகவலும் கிடைக்கவில்லை -

இதற்கிடையில் -

இந்த ஆறு பேரையும் இராணுவத்தினரே அழைத்துச் சென்றதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர் என்று செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டது.

இந்தப் பகுதியில் மீன்பிடிக்க மற்றும் விறகு சேகரிக்கச் சென்ற கிராமவாசிகள் பலர் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமல் போவது அல்லது சடலமாக மீட்கப்படுவது வழமை என்பதால் காணாமற்போன அறுவரது நிலை குறித்தும் கிராம மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. (ம-4)

## கட்டுநாயக்காத் தாக்குதல்: விசாரணைக்கு விசேட குழு!

### ஜனாதிபதி நியமித்தார்

கொழும்பு,ஓக.16

கட்டுநாயக்கா விமானத்தளம் மற்றும் விமான நிலையம் ஆகியவற்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து விசாரணை நடத்துவதற்கென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசேட குழுவை நியமித்துள்ளார்.

ஓய்வுபெற்ற நீதியரசர் ஜெயவிக்கிரம மற்றும் ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி ஏயர் மார்ஷல் மெண்டிஸ் ஆகியோர் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்காத் தாக்குதல் குறித்தும், பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருந்த குறைபாடுகள் குறித்தும் இக்குழு விரிவாக ஆராய்ந்து ஒரு மாதத்துக்குள் தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்காத் தாக்குதலை அடுத்து வேலையில்லாப் பிரச்சினை, பணவீக்கம்!

### பெரும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை

கொழும்பு,ஓக.16

கட்டுநாயக்காத் தாக்குதலைத் தொடர்ந்து நாட்டில் வேலையில்லாப் பிரச்சினையும் பணவீக்கமும் மிக மோசமாக அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த விடயத்தில் ஜனாதிபதி உடனடியாகத் தலையிட்டு தீர்வு காணவேண்டும்.

- இவ்வாறு இலங்கைத் துறைமுகக் கப்பல் முகவர் சங்க உபதலைவர் பராக்கிரம திஸாநாயக்கா தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கட்டுநாயக்காத் தாக்குதலின் பின்னர் இலங்கை போராபத்து நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இலங்கைத் துறை முகங்களுக்கு வரும் கப்பல்களுக்கான காப்புறுதிக் கட்டணம் பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையால் கொழும்புத் துறைமுகத்துக்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்துக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றைக் கூட்டுவது குறித்து

# மீண்டும் சபாநாயகருடன் எதிர்க்கட்சிகள் பேசும்!

கொழும்பு,ஓக.16

அடுத்த மாதம் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பாக எதிர்க்கட்சிகள் அனுரா பண்டாரநாயக்காவை மீண்டும் அடுத்த வாரம் சந்தித்துப் பேசவுள்ளன.

செப்ரெம்பர் 7 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் அத்திகதியில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கூட்டாது மேலும் ஒரு தவணைக்கு ஒத்திவைக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால் -

அடுத்த மாதம் சபாநாயகர் நாடாளுமன்றத்தைக் கட்டாயம் கூட்டியே ஆக வேண்டும் என்று வலியுறுத்துவதற்காகவே எதிர்க்கட்சிகள் மீண்டும் அவரைச் சந்தித்துப் பேச உள்ளன.

முதல் தடவையாக நாடாளுமன்றை ஜனாதிபதி ஒத்திவைத்த கையோடு இதேபோன்ற கோரிக்கை ஒன்றை எதிர்க்கட்சிகள் சபாநாயகரைச் சந்தித்து முன்வைத்ததும் -

அதனை சபாநாயகர் நிராகரித்ததும் - தெரிந்ததவையே. (உ-ம-4)

# ரூபவாஹினி, இலங்கை வானொலி தாக்கப்பட்டால் தடுப்பது எப்படி?

## கொழும்பில் செவ்வாயன்று ஒத்திகை

கொழும்பு,ஓக.16

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் மீது திடீர்த் தாக்குதல் ஏதும் நடத்தப்பட்டால் அதனை எவ்வாறு தடுப்பது என்பது தொடர்பான ஒத்திகை ஒன்று நேற்று முன்தினம் இரவு அங்கு நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் தடுப்பு ஒத்திகையில் பொலீஸார், தீயணைப்புப் படையினர், விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் என்று நூற்றுக்கணக்கானோர் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9மணி முதல் 10மணிவரை சுமார் ஒரு மணிநேரம் இந்த ஒத்திகை நடத்தப்பட்டது. திடீரென - முன்னறிவிப்பு ஏதுமின்றி - இந்த ஒத்திகை நடத்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மாகாணப் பொதுச் சேவைச் சிற்றூழியர்களை மாகாணப் பொது எழுதுநர் சேவையின் வகுப்பு II பிரிவு 'ஆ' வுக்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2001

மாகாணப் பொதுச் சேவைச் சிற்றூழியர்களை மாகாணப் பொது எழுதுநர் சேவை வகுப்பு II பிரிவு 'ஆ' வுக்கு, நிமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 20.09.2001 ஆகும்.

2) **சம்பள அளவுத் திட்டம்:-** பொது நிர்வாக சுற்றறிக்கை 2/97 (III)ற்கு அமைவாக
ரூபா 47, 880 - 14x1,320 - 6x1,560 - 75,720/=
ரூபா 62,400/= - வருடாந்த சம்பளத்திற்கு முன் வினைத்திறமை காண் தடை உண்டு.

3) **தகைமைகள்:**
விண்ணப்பதாரி (I) வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையில் நிரந்தர நியமனம் உடைய வராகவும் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(II) 1997.01.15ஆம் திகதிய 2/97 (III)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி வருடாந்தம் ரூபா 47,879க்கு குறைந்த தொடக்க வேதனத்தையுடைய பதவியை வகிப்பவராக இருந்தல் வேண்டும்.

(III) 2001.09.20 ஆம் திகதிக்கு உடன் முந்திய மூன்று வருட காலப் பகுதியில் தொடர்ச்சியாகவும் திருப்திகரமாகவும் சேவையாற்றி உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(அ) மாகாணப் பொதுச் சேவையிலுள்ள மோட்டார் வாகனச் சாரதிகள் ஏனைய தகைமைகளைக் கொண்டிருப்பின் அவர்களின் சம்பளப் படிநிலையைக் கருத்திற்கொள்ளாது இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) 1987.12.31 ஆம் திகதியன்று விண்ணப்பதாரி வகித்த அரசாங்க நிரந்தரப் பதவி ஒன்றுக்குரிய சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச் சம்பளம் வருடாந்தம் ரூபா 8,540க்கு மேற்படும் பட்சத்தில் அவர் 1975.04.01ஆம் திகதிக்கு முன்னர் வருடாந்தத் தொடக்கச் சம்பளம் ரூபா 3,000க்குக் குறைவாக இருந்த ஒரு பதவி பின்னர் எல்.பீ.த.சில்வா சம்பளக் குழு வினால் வருடாந்த தொடக்கச் சம்பளம் ரூபா 3,000க்கு மேற்படும் வகையில் மீளாய்வு செய்யப்பட்டு அதே பதவியை அவர் தொடர்ந்தும் வகித்து வருவாரானால் மட்டுமே பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி உடையவராவார்.

(IV) 2001.09.20 ஆம் திகதியன்று 30 வயதுக்குக் குறைந்தவராக இருப்பின், க.பொ.த.(சா/த) பரீட்சையில் இரண்டுக்கும் மேற்படாத அமர்வுகளில் மொழி/இலக்கியம் உட்பட எண்கணிதம்/தூயகணிதம்/ஆரம்பகணிதம்/வர்த்தக எண்கணிதம் அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.

(V) பகுதித் தொழில்நுட்பச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்கள் அல்லது ஏதேனும் ஒரு செயற்பாட்டிற்காக பயிற்றப்பட்டுள்ளவர்கள் அல்லது அரசினால் விசேட முறையில் பயிற்சி அளிக்கப்பட்ட ஊழியர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

4) **ஆட்சேர்ப்பு முறை:-** அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் அரச சுற்றுநிருபங்களுக்கு அமைவாக எழுத்துப் பரீட்சை பெறுபேற்றின் திறமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களிடம் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் அவரது இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

5) **எழுத்துப் பரீட்சை:-** இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழி மூலங்களிலும் நடத்தப்படும். இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும். இப்பரீட்சைக்குரிய பாடங்களும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழ்வருமாறு:

| | | | புள்ளிகள் |
|---|---|---|---|
| (I) | மொழியும் கட்டுரையும் | 1 1/2 மணித்தியாலம் | 150 |
| (II) | பொது அறிவும் பிரதேசம் பற்றிய அறிவும் | 1 மணித்தியாலம் | 100 |
| (III) | நெடுங்கூட்டலுடன் எண் கணிதம் | 1 மணித்தியாலம் | 100 |
| (IV) | பொது விவேகம் | 30 நிமிடம் | 100 |
| (V) | எழுதுநர் சேவை உளச் சார்புத் தேர்வு | 1 மணித்தியாலம் | 100 |

மேற் குறிப்பிடப்பட்டுள்ள (V)ஆம் இலக்கப் பாடம் பரீட்சார்த்தியின் எழுதுநர் கடமைகளை ஏற்று நடத்தும் உளச்சார்பையும் ஆற்றலையும் பரீட்சிக்கும் வகையில் அமையும். இப்பரீட்சையில் (1) மொழியும் கட்டுரையும், (2) நெடுங்கூட்டலுடன் எண்கணிதம் ஆகிய பாடங்கள் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்படும் புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40%ஐயும், விசேட பாடமான எழுதுநர் சேவை உளச்சார்புத் தேர்வில் ஆகக் குறைந்தது 50%ஐயும் பெறுதல் வேண்டும்.

5.1 - **பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவேண்டிய மொழிமூலம்:-**

(I) அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கலுக்கு முன்னர் சேர்ந்தவர்கள் தாம் கல்வி கற்ற மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

(II) அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கலுக்குப் பின்னர் சேர்ந்தவர்கள் போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் சேவைக்கு சேர்ந்திருக்குமிடத்து அந்தப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியிலேயே இப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி ஆள்சேர்க்கப் பட்டவர்களின் விடயத்தில் அச்சேவையில் சேர்வதற்கு தகைமை பெற்ற மொழியே பரீட்சை மொழியாதல் வேண்டும்.

எவ்வாறாயினும் விண்ணப்பதாரிகள் தம் விருப்பத்துக்கேற்ப ஏதேனும் ஒரு அரச கரும மொழியில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றலாம்.

6) **பரீட்சைக் கட்டணம்:-** விண்ணப்பதாரி வதியும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200/= ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் 6004ஆம் இலக்க வைப்புக் கணக்கில் வரவில் சேரக்கூடியதாகப் பிரதேசச் செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய இப்பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

7) **விண்ணப்பிக்கும் முறை:-** இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக 'ஏ' 4 அளவிலான (21செ.மீ. X 29செ.மீ.) தாளில் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2001.09.20 ஆம் திகதிக்கு முன்பதாக *"செயலாளர், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, இல. 35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை."* என்ற முகவரிக்குத் திணைக்கத் தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மா.பொ.எ.செ. வகுப்பு II பிரிவு 'ஆ' வகுப்புக்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2001" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
விண்ணப்பதாரி ஒருவருக்கு அவரது அனுமதி அட்டை எழுத்துப் பரீட்சைக்கு குறைந்த பட்சம் ஏழு நாள்களுக்கு முன்பாவது கிடைக்கப்பெறாவிடின் அது பற்றி பரீட்சார்த்தி உடனடியாக மேலே தரப்பட்ட முகவரியுடன் தொடர்புகொள்ள வேண்டும்.

8) பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:

| நகரம் | | எண் | நகரம் | | எண் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | 1 | திருகோணமலை | - | 6 |
| மன்னார் | - | 2 | மட்டக்களப்பு | - | 7 |
| வவுனியா | - | 3 | அம்பாறை | - | 8 |
| கிளிநொச்சி | - | 4 | கல்முனை | - | 9 |
| முல்லைத்தீவு | - | 5 | | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள மற்றுமொரு நகரத்தின் பரீட்சை நிலையத்துக்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**திருமதி க.சிவசிதம்பரம்**
*செயலாளர், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மாகாணம்.*

## மாதிரி விண்ணப்பப் படிவம்

## மாகாணப் பொதுச் சேவை சிற்றூழியர்களை மாகாணப் பொது எழுதுநர் சேவை வகுப்பு II பிரிவு 'ஆ' வுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2001

சுட்டெண்: [ ]
(அலுவலக உபயோகத்துக்கு)

01) முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரரின் பெயர் : வண/திரு/திருமதி/செல்வி:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-
02) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-
03) தபால் முகவரி:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-
04 நிரந்தர முகவரி:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-
05) அலுவலக முகவரி:-
தமிழில்:-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-

06) பிறந்த திகதி:-
2001.09.20 ஆம் திகதியன்று வயது:-

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| வருடங்கள் | மாதங்கள் | நாள்கள் |

07) இனம்: சிங்களவர் [ ] இலங்கைத் தமிழர் [ ] இந்தியத் தமிழர் [ ]
முஸ்லிம் [ ] ஏனையவர் [ ]

08) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்: தமிழ்T/சிங்களம்S/ஆங்கிலம்E [ ]

09) தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்:
(08ஆவது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்) [ ]

10) கல்வித் தகைமைகள்:
(I) க.பொ.த. (சா/த) ஆண்டு: சுட்டெண்:
முதலாவது அமர்வு

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1) | | 5) | |
| 2) | | 6) | |
| 3) | | 7) | |
| 4) | | 8) | |

க.பொ.த. (சா/த) ஆண்டு: சுட்டெண்:
இரண்டாவது அமர்வு

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1) | | 5) | |
| 2) | | 6) | |
| 3) | | 7) | |
| 4) | | 8) | |

11) தற்போது வகிக்கும் சேவை பற்றிய விவரங்கள்:
(I) விண்ணப்பதாரி தற்போது சேவையாற்றும் திணைக்களத்தின் பெயர்:-
(II) தற்போது வகிக்கும் பதவியின் பெயர்:-
(III) தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி:-
(IV) தற்போதைய பதவி நிரந்தரமானதா? அல்லது தற்காலிகமானதா:-
(V) தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா:-
(VI) உறுதிப்படுத்தப்பட்டிருந்தால், உறுதிப்படுத்தப்படுவதற்கு நீர் தகைமை பெற்ற திகதி:-
(VII) தற்போதைய பதவியில் உம்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ள கடிதத்தின் திகதியும் இலக்கமும்:-
(VIII) தற்போதைய ஆண்டு வேதனம் (திரட்டிய):-
12) பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

[ ]

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .................... பிரதேச செயலகத்தின்.................ஆம் இலக்க...............ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கின்றேன் என்றும் மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின் படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தத் தன்மையை ரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வதற்கும் எனது இணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திகதி:........................ ....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

13) விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:
விணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற வண/திரு/திருமதி/செல்வி.............................. என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும்.........................ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:........................ ....................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர்:-
பதவி:-
முகவரி:-(பதவி முத்திரை)

14) திணைக்களத் தலைவரின் உறுதியுரை:
(1) பரீட்சார்த்தியான திரு/திருமதி/செல்வி .............................. இத்திணைக்களத்தில் பணி செய்யும் ஒருவர் எனவும்,
(2) இவர் 2001.09.20 ஆம் திகதியன்று நிரந்தரமான பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் எனவும்,
(3) இவர் 2001.09.20 திகதியன்றோ அதற்கு முன்னரோ ஆகக்குறைந்தது 03ஆண்டுகள் நிரந்தரமான சேவையினைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும்,
(4) 2001.09.20ஆம் திகதிக்கு முன்னதாக உள்ள 03ஆண்டு காலத்தில் இவரது வேலையும் ஒழுக்கமும் திருப்திகரமாக இருந்தன எனவும்,
(5) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குள் அடங்கும் வேதனத்தை பெறுகின்றார் எனவும் அல்லது வேதனத் திட்டத்தில் அமர்த்தப்பட்டுள்ளார் எனவும்,
(6) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு இவர் தெரிவு செய்யப்பட்டால் இவரை விடுவிக்க முடியும் எனவும் இத்தால் உறுதி கூறுகின்றேன்.

திகதி:........................ ....................................
திணைக்களத் தலைவரின்
பெயரும் கையொப்பமும்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

(C/17878)



இஸ்ரேலிய இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பலஸ்தீன கேந்திர நிலையமான ஓரியண்ட் ஹவுஸிலிருந்து இஸ்ரேலியர்களை வெளியேற வற்புறுத்தி பலஸ்தீனச் சிறுவர்கள் சமீபத்தில் நடத்திய எழுச்சி ஆர்ப்பாட்டத்தில் ஒரு காட்சி இது.

## கண்ணிவெடியில் ரயில் சிக்கி அங்கோலாவில் 152 பேர் பலி!

லுவாண்டா,ஓக.16

அங்கோலாவில் பயணிகள் ரயில் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 152 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை தலைநகர் லுவாண்டாவிற்கும், புறநகர்ப் பகுதியான டொண்டாவிற்கும் இடையில் பயணிகள் ரயில் சென்றுகொண்டிருந்தபோது தீவிரவாதிகள் வைத்த கண்ணிவெடியில், சிக்கியது.

அந்தச் சமயத்தில் தண்டவாளத்துக்கு அருகில் மறைந்திருந்த தீவிரவாதிகள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில், 26 படையினர், 11 பொலீஸார் உட்பட 152 பேர் கொல்லப்பட்டனர். இந்த ரயிலில் பயணம் செய்வதற்காக சம்பவதினத்தன்று 460 பேருக்கும் அதிகமாகப் பயணச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்த ரயில்வே அதிகாரிகள் இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிட்டனர்.

பயணிகள் ரயிலில் இராணுவத்துக்குத் தேவையான வெடிபொருள்களும் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் -

அதனால் கண்ணிவெடி வெடித்ததுமே ரயில் முற்றாகத் தீப்பிடித்ததாக்வும் -

நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு 'யுனிற்றா' என்ற தீவிரவாத அமைப்பு உரிமை கோரியுள்ளது.

## கால் பாதங்களை இழந்தவர் எவரெஸ்ட்டில் ஏற முயற்சி

காத்மண்டு,ஓக.16

இருகால் பாதங்களையும் இழந்த அமெரிக்கர் ஒருவர், உலகில் அதிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிச் சாதனை படைக்க தீர்மானித்துள்ளார்.

45 வயதான எட்கோமர் என்ற இந்த அமெரிக்கர் 1981 ஆம் ஆண்டு விமானத்தில் பயணித்த போது, அது விபத்துக்குள்ளாகியதால், தனது இருகால்களின் பாதங்களையும் இழந்தார்.

விபத்துக்கு முன்னரே மலையேற்ற வீரராக இருந்த எட்கோமர், பாதங்களை இழந்த பின்னும் மனம் தளராது பல மலைகளில் ஏறியுள்ளார்.

வேறு ஆறுபேருடன் இணைந்து 8 ஆயிரத்து 850 மீற்றர்கள் உயரமான எவரெஸ்ட்சிகரத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி தனது முயற்சியை ஆரம்பிக்கும் எட்கோமர் ஒக்ரோபர் மாதம் முதல்வாரத்தில் எவரெஸ்ட்டின் உச்சியை சென்றடைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனது முயற்சியில் வெற்றி பெற்றால் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த, இருகால்களும் ஊனமுற்ற முதல்நபா என்ற பெருமையை இவர் பெறுவார்.

வலது காலை விபத்தொன்றில் இழந்த ரொம் விக்ராக்கர் என்பவர் 1998 இல் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பாகிஸ்தானுக்குச் செல்ல வாஜ்பாய்க்கு எதிர்ப்பு

### தோழமை அமைப்பிடமிருந்து

காஷ்மீர்த் தீவிரவாதிகளுக்கு உதவுவதைப் பாகிஸ்தான் நிறுத்தாத வரை, இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொளளக்கூடாது என்று தீவிர இந்துத்துவ அமைப்பான பஜ்ரங்தள் வலியுறுத்தியுள்ளது.

இதனை வலியுறுத்தும் கடிதம் விரைவில் பிரதமர் வாஜ்பாயிடம் சேர்ப்பிக்கப்பட உள்ளதாக பஜ்ரங்தள தலைவர் சுரேந்தர்லால் ஜெயின் தெரிவித்தார்.

பாரதிய ஜனதாக்கட்சியுடன் இணைந்து பஜ்ரங்தள் செயற்பட்டு வருவதால், அதனுடைய கருத்தை பிரதமர் வாஜ்பாயால் உதாசீனப்படுதத முடியாது என்றே அவதானிகள் நம்புகின்றனர்.

அதேவேளை, காஷ்மீர்த் தீவிரவாதிகளுக்கு உதவப்போதில்லை என்று பாகிஸ்தான் வெளிப்படையாக அறிவிப்பது சாத்தியமில்லை என்றே கருதப்படுகிறது.

இதனால் பிரதமர் வாஜ்பாய் கடும் பிரச்சினைகளை எதிர்கொண்டே, தனது பாகிஸ்தான் விஜயத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்று கூறப்படுகிறது. (ஒ-9)

## பாகிஸ்தானுக்கு தகவல் வழங்கிய இந்தியக் கடற்படை அதிகாரி கைது!

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான ரகசிய ஆவணங்களையும், தகவல்களையும் பாகிஸ்தானிய உளவு அமைப்பின் முகவருக்கு வழங்கிய சமயம், இந்தியக் கடற்படை அதிகாரி ஒருவர் கையும் மெய்யுமாகக் கைது செய்யப்பட்டார்.

ஆந்திர மாநிலம் விசாகபட்டினத்தில் உள்ள தனது அலுவலகத்தில் இருந்து, கிழக்குப் பிராந்திய கடற்படை தலைமையகத்தின் புகைப்படப் பிரிவுக்குப் பொறுப்பான 44வயதுடைய அந்த அதிகாரி, நேபாளத்தில் நிலைகொண்டிருந்த் பாகிஸ்தானிய உளவு அமைப்பு முகவருக்கு அலுவலகக் கணனி ஊடாக மின் அஞ்சல் மூலம் ரகசியத் தகவல்களை அனுப்பிக்கொண்டிந்த போது கடற்படைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைதான அதிகாரி மீது வெகுநாள்களாகவே சந்தேகம் ஏற்பட்டு அவரது நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டதாகவும் -

இறுதியில் அவர் கையும் களவுமாகப் பிடிபட்டுள்ளதாகவும் -

இந்தியக் கடற்படைப் பொலீஸ் தெரிவித்தது. (ஒ-9)

## மாதம் 2500 பேர் என்ற ரீதியில்

# புகலிடம் நிராகரிக்கப்பட்டோரை திருப்பி அனுப்ப பிரிட்டன் திட்டம்

லண்டன்,ஓக.16

பிரிட்டனில் புகலிடம் கோரி விண்ணப்பித்தவர்களில் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களை மாதம் 2 ஆயிரத்து 500 பேர் என்ற ரீதியில் திருப்பி அனுப்ப பிரிட்டிஷ் அரசு முடிவு செய்துள்ளது.

புகலிட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தறபோது பிரிட்டனில் சுமார் 60 ஆயிரமாக உள்ளது.

இவர்களை மாதமொன்றுக்கு 2 ஆயிரத்து 500 பேர் வீதம் 2 வருடங்களில் திருப்பி அனுப்பிவிடுவதே பிரிட்டிஷ் அரசின் புதிய திட்டமாகும்.

புகலிடம் கோரும் விண்ணப்பங்களை துரிதமாகப் பரிசீலித்து முடிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை பிரிட்டனில் புகலிடம் கோரி விண்ணப்பித்தவர்களில் 80 சதவீதமானவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் -

தற்போது தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள், மாதாந்தம் 750 பேர் வீதமே திருப்பியனுப்பப்படுவதாகவும் - அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேசமயம், புகலிட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டாலும் ஆப்கானிஸ்தான் உட்பட சில நாடுகளைச் சேர்ந்த அகதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்று தெரிவித்த அதிகாரிகள், அந்த நாடுகளில் இலங்கை அடங்கியுள்ளதா என்பது குறித்து கருத்து எதனையும் இதுவரை தெரிவிக்கவில்லை. (ஒ)

### உலக அரங்கில்

### 75 வயது காஸ்ட்ரோவுக்கு அமெரிக்கா அறிவுரை

வாஷிங்ரன்,ஓக.16

கடந்த திங்களன்று தனது 75 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடிய கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோ, வயதாகி விட்டதால் அரசியலில் இருந்து இளைப்பாற வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.(ஒ)

### மாணவர் பாதிப்பு

கௌகாத்தி,ஓக.16

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில மாவட்ட நிர்வாகம் ஒன்று கடந்த வாரம் ஏற்பாடு செய்திருந்த அமைதி ஊர்வலத்தின் போது, விநியோகிக்கப்பட்ட கெட்டுப்போன உணவை உண்டதால் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## நாடு கடத்தல் திட்டத்துக்கு பிரிட்டனில் கடும் எதிர்ப்பு

லண்டன்,ஓக.16

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களைத் திருப்பி அனுப்பும் பிரிட்டிஷ் அரசின் புதிய திட்டத்துக்கு எதிர்ப்புகள் எழுந்துள்ளன.

பிரிட்டனின் குறிப்பிடத்தக்க அமைப்பான அகதிகள் சபை,

தவறான தகவல்களின் அடிப்படையிலேயே அகதிகளுக்கு எதிரான கருத்துகள் பரப்பப்படுவதாகவும் -

இது தொடர்பாக அதிகாரிகளால் அதிக அளவில் நடவடிக்கைகளை எடுக்க முடியவில்லையெனவும் -

புகலிடம் கோருவோர் சார்பில் அர்ப்பணிப்பு உணர்வுடன் அவர்களுக்கு உதவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாகவும் - தெரிவித்துள்ளது.

அரசின் தற்போதைய திட்டத்தைச் செயற்படுத்தினால், அரசியல் ரீதியான உணர்வலைகளை அது தோற்றுவித்துவிடும் என்று அரசியல் கட்சிகள் எச்சரித்துள்ளன.

மாதந்தோறும் 2 ஆயிரத்து 500 பேரைத் திருப்பி அனுப்புவதானால், புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களின் வீட்டுக் கதவுகளைப் பொலீஸார் நள்ளிரவில் தட்டி எழுப்பி, அவர்களை நாடு கடத்தவேண்டிய சூழ்நிலை உருவாகும் என்றும் -

இதனால் சிறுபான்மை மக்களிடையே பதற்றம் அதிகரிக்குமெனவும்-

சமூகவியலாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

சமூகவியலாளர்களின் கருத்துக்களைச் சுட்டிக்காட்டும் பிரிட்டிஷ் பொலீஸார், புதிய திட்டத்தால் ஏற்படும் இத்தகைய நிலைகள் இனக் குழுக்களுடன் தாம் இத்தனை காலமாகக் கட்டியெழுப்பிய நல்லுறவுகளைச் சீருலைக்கும் என்று அச்சம் வெளியிட்டுள்ளனர்.

பிரிட்டனில் புகலிடம் தேடுவோருக்கு எதிரான உணர்வுகளைப் பத்திரிகைகளும் அரசியல்வாதிகளுமே உருவாக்கியிருப்பதாக அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் ரூப் லூப் பேர்ஸ் தெரிவித்துள்ளார்.

அகதிகளை பிரிட்டன் நடத்தும் விதம் குறித்து லூப் பேர்ஸ் விசனம் தெரிவித்த சில தினங்களில் நாடு கடத்தும் புதிய திட்டத்தை பிரிட்டன் அறிவித்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)


## இன வன்செயல்கள் பற்றிய மெய் அறியும் சனாதிபதி ஆணைக்குழு

### கட்டுரைகள் (முறைப்பாடுகள்)/சான்றுகள் கோருவதற்கான அறிவித்தல்

ஆணைக்குழு விசாரணைச் சட்டத்தின் (அத்தி. 393) 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளை அனுசரித்து அதிமேதகு சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் பின்வருவனவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதன் பொருட்டு, பின்வரும் அங்கத்தவர்களைக் கொண்ட இனவன் செயல்கள் பற்றிய சனாதிபதியின் மெய் அறிதல் ஆணைக்குழு ஒன்றினை நியமித்துள்ளார்.

**சுப்பையா சர்வானந்தா அவர்கள் (இலங்கையின் ஓய்வு பெற்ற பிரதம நீதியரசர்)- தலைவர்**
**சத்தியலோக சசித சகபந்து அவர்கள் (சனாதிபதி சட்டத்தரணி) - அங்கத்தவர்**
**எம்.எம்.சுஹைர் அவர்கள் (சனாதிபதி சட்டத்தரணி) - அங்கத்தவர்**

(i) மனித உரிமை மீறல்களின் இயல்பு, காரணம், அளவு அத்துடன் 1981 ஆரம்பத்திலிருந்து 1984 டிசெம்பர் வரை 1983 ஜூலை காலப்பகுதிக்கு விசேட கவனத்துடன் இனவன்செயல்களின் ஒருபகுதியாக ஏற்படுத்தப்பட்ட அழிவு அத்துடன் ஏதாவது சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதம், அத்தகைய வன்செயல்கள் ஏற்பட்டதற்கான காரணம்.

(ii) அத்தகைய வன்செயல்களுக்கு எவராவது ஆள் நேரடியாக அல்லது மறைமுகமாக பொறுப்பாக இருந்தாரா அல்லது ஏதாவது குழு அல்லது நிறுவனம் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொறுப்பாக இருந்ததா?

(iii) அத்தகைய வன்செயல்களினால் உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பின் இயல்பும் அளவும்.

(iv) அத்தகைய பாதிப்புக்களுக்கு உள்ளானவர்களுக்கு அல்லது அவர்களில் தங்கிவாழ்பவர்களுக்கு அல்லது உரிமையாளர்களுக்கு நட்டஈடாக அல்லது ஆறுதல் தொகையாக வழங்கப்படவேண்டிய தொகை.

(v) எதிர்காலத்தில் இத்தகைய மனித உரிமை மீறல்கள், சொத்துக்களுக்கு அழிவுகள்அல்லது சேதங்கள் மீண்டும் ஏற்படாது தடுப்தற்கும் அனைத்து இன மக்களிடையேயும் தேசியஐக்கியத்தையும், இணக்கத்தையும் மேம்படுத்துவதற்கும் எடுக்கப்படவேண்டிய நிறுவன, நிருவாகச் சட்டமுறையான நடவடிக்கைகள்.

2. இந்த வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட அல்லது அதன் விளைவுகளினால் பாதிக்கப்பட்ட ஏதாவது தனிநபர் /அமைப்புக்கள் அல்லது அந்த வன்செயல்கள் பற்றி அறிந்திருக்கும் அல்லது அவ்வன்செயல்கள் தொடர்பான சம்பவங்கள் தொடர்பாகப் பேசக்கூடிய அல்லது ஏதாவது வகையில் உதவக்கூடிய ஆளுக்கு ஆணைக்குழு முன் கட்டுரை நிகழ்த்துவதற்கு /அல்லது சாட்சிய மளிப்பதற்கு அல்லது இவை இரண்டையும் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.
3. இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வதியும் அத்தகைய ஆள்களிடமிருந்து கட்டுரை/சாட்சியங்களை வாய்மொழி மூல அல்லது எழுத்து மூல வாக்குமூலங்களாக அல்லது ஒளிப்படங்கள், வீடியோ நாடாப்பதிவுகள், ஒலிப்பதிவுகள் அல்லது பி வடிவங்களில் ஆணைக்குழு பெற்றுக்கொள்ளும்.
4. கட்டுரை நிகழ்த்துவதற்கு அல்லது சாட்சியமளிப்பதற்கு அல்லது இவை இரண்டையும் செய்வதற்கு முன்வரும் எவராவது ஆள் பகிரங்கமாக அல்லது இரகசியமாக சாட்சியமளிக்க முடியும். அவர் அடையாளம் காணப்படுவதைத் தடுப்பதற்கு கவனம் எடுக்கப்படும். அத்துடன் அத்தகைய ஆளின் அடையாளம் பாதுகாக்கப்படுவதுடன் வெளிப்படுத்தப்படவும் மாட்டாது. (அத்தகைய சந்தர்ப்பங்களில் சாட்சி ஒருவர் இலக்கங்கள் மூலமாகவே அடையாளங் காணப்படுவர்.)
5. எந்த ஓர் ஆளை அல்லது அமைப்பை சாட்சியமளிப்பதற்கு அல்லது காண்புகளில் உதவுவதற்கு அல்லது இரண்டையும் செய்வதற்கு அழைப்பதற்கான உரிமையை ஆணைக்குழு கொண்டுள்ளது.
6. அனைத்து தொடர்புகளும் சாதாரணமாகப் பின்வரும் முகவரியிலுள்ள இனவன்செயல்கள் பற்றிய உண்மை நிலை கண்டறிவதற்கான சனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு 2001, ஒக்ரோபர் 15 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

**இல. 2-G-12, பி.எம்.ஐ.சி.ஏச்.**
**பௌத்தாலோகா மாவத்தை,**
**கொழும்பு 7. இலங்கை.**
**T.P.669132/ 669136.**

ஆணைக்குழுவின் கட்டளைப்படி,
எஸ்.எம்.ஜே.சேனாரத்ன
ஆணைக்குழுவின் செயலாளர்.

(C/17864)

பருத்தித்துறை மெதடிஸ்த பாடசாலை

# விஞ்ஞான ஆய்வுகூட கட்டடம் ரூ.8 லட்சம் செலவில் நிர்மாணம்

வடமராட்சி, ஒக. 16

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 8 லட்சம் ரூபா செலவில் புதிய விஞ்ஞான ஆய்வுகூட மாடிக்கட்டடம் விரைவில் கட்டப்படவுள்ளது.

இதற்கான வைபவம் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற போது வடமராட்சி வலயப் பணிப்பாளர் சி. சிவராசா அடிக்கல்லை நட்டு வைத்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், பெற்றோர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

விஞ்ஞான ஆய்வுகூட மாடிக்கட்டடத்திற்கான நிதியை பிரதேச பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது. (க–173-117)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக. 16

காங்கேயன் கலைக்கோட்டம் நடத்தும் வே. அம்பிகைபாகன் எழுதிய ''செல்வச் சந்நிதி தேர்த்திறன்'' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய முன்றிலில் பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நல்லூர்ப் பிரதேசசபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் கலந்துகொள்வார்.

இந்த நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் ப. கோபாலகிருஷ்ணஐயர் நிகழ்த்தவுள்ளார்.

(க–4)

## நல்லூரில் இன்று சப்பரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஒக. 16

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் நடைபெற்று வரும் வருடாந்த மஹோற்சவத்தின் சப்பரத் திருவிழா இன்று 16ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

இரதோற்சவம் நாளை 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கும், தீர்த்தோற்சவம் நாளை மறுதினம் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கும் நடைபெறும்.

(க-173)

யாழ். அடைக்கலமாதா ஆலய மண்டப

# இலவச மருத்துவ முகாமில் 400 பேர் பங்குபற்றினர்

யாழ்ப்பாணம், ஒக. 16

யாழ்.பரி.அடைக்கலமாதா திரு இருதய சபையினரும், யாழ். லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம் கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அடைக்கலநாயகி ஆலய ஜெறோம் மண்டபத்தில் சபைத் தலைவர் ஏ. பிரான்ஸிஸ் தலைமையில் நடைபெற்றது.

சுமார் 400–க்கும் மேற்பட்ட நோயாளர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட இம்முகாமில் நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்ட 23 பேரும், அதிக இரத்த அழுத்த நோயினால் பாதிக்கப்பட்ட 8 பேரும், கண்ணில் வெண்படல நோயினால் பீடிக்கப்பட்ட 4பேரும், வைத்தியசாலையில் சிகிச்சை பெறச்சிபாரிசு செய்யப்பட்டுள்ளனர்.

82 பேருக்கு கண் பரிசோதித்து கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. 44 பேர் 'கற்றாக்' பாதிப்புக்கு உள்ளாகி இருந்ததும் கண்டறியப்பட்டது.

இவ்வைத்திய பரிசோதனை நிகழ்வை ஆரம்பித்து வைத்த ஆலயப் பங்குத் தந்தை வண. பயஸ் அடிகளார் லயன்ஸ் கழகத்தினரையும், திருஇருதய சபையினரையும் பாராட்டி ஆசி வழங்கினார்.

(க–15)

## வடமராட்சியில் செங்கண்மாரி பரவுகிறது

வடமராட்சிப் பிரதேசத்தில் காய்ச்சல் மற்றும் செங்கண்மாரி நோய் ஆகியவை பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந் நோய்களினால் பீடிக்கப்பட்ட பலர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

ஓய்வுபெறும் அரச ஊழியர்கள்

# ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் வேலை செய்வதற்குக் கட்டுப்பாடு

கொழும்பு, ஒக. 16

அரசசேவையில்இருந்துஓய்வு பெறும் ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் அரச சேவையில் வேலை வாய்ப்புப் பெறுவதைக் கட்டுப்படுத்துவதென அரசு முடிவு செய்துள்ளது

இது தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:–

சேவையில் உள்ள அரச ஊழியர் ஒருவர் ஓய்வுபெறும் போது அவரது இடத்துக்கு வேறு ஓர் அதிகாரியை நியமிப்பதற்கு நடவடிக்கைகளை அமைச்சுச் செயலாளர்கள் முன்கூட்டியே மேற்கொள்ள வேண்டும். அந்த அதிகாரிக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கி அவரைத் தயார்படுத்தி குறிப்பிட்ட அதிகாரி ஓய்வு பெற்றதும் அந்த இடத்துக்கு அவரை நியமிக்கவேண்டும்.

இந்த விடயத்தில் கீழ்க் காணும் பதவிகளை வகிப்பவர்களுக் த தவிர்க்க முடியாத காரணங்களுக்காகவிதிவிலக்கு அளிக்கப்படும்.

சுகாதார அமைச்சில் பணி புரியும் விசேட வைத்திய அதிகாரிகள்.

★ உதவி வைத்தியத் தரத்தில் உள்ள அதிகாரிகள் மற்றும் தாதிகள்.

★ விசேட துறையில் பணிபுரியும் பொறியியலாளர்கள்.

★ வடக்கு–கிழக்கு மாகாணத்தில் யுத்த நடவடிக்கைப் பிரதேசத்தில் பணிபுரியும் அதிகாரிகள்.

இந்தத் தரங்களில் உள்ளவர்களுக்கு ஒரு வருடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கலாம். அந்தக் காலப்பகுதிக்குள் புதியவர்களைப் பயிற்சி அளித்து அந்தப் பதவிக்கு நியமிக்க குறிப்பிட்ட நிறுவனத்தின் தலைவர் ஏற்பாடு செய்யவேண்டும்

பிரஸ்தாப நான்கு பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் போது அவர்களுக்கு ஓய்வூதியம் அக்காலத்துக்கு வழங்கப்படமாட்டாது. சேவைக்கான அலவன்ஸ் மட்டும் வழங்கப்படும் — என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (க-3)

## உழைப்பாளர்களை இழந்தபெண்களின் விவரம் சேகரிப்பு

தென்மராட்சி, ஒக. 19

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த குடும்ப உழைப்பாளர்களை இழந்த 200 பெண்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் இக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் தொழில் முயற்சியை வழங்க விவரங்கள் அந்தந் தந்தப்பிரிவு கிராம அலுவலர் மூலம் திரட்டப்பட்டு வருகின்றன. (க–117)

## சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வு

வடமராட்சி, ஒக. 16

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 10. 30 மணிக்கு ''புகலிடம் பிறிதொன்றுமில்லை'' என்ற தலைப்பில் ஞானபண்டித இயலரசு க. முத்துவேல் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை பேரவை உறுப்பினர் எஸ். துரைராசா நிகழ்த்துவார்.

(க-173)

# நாடாளுமன்றை உடன்கூட்ட கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## திங்களன்று பொதுக்கூட்டமும் நடக்கும்

நாடாளுமன்றத்தை உடன் கூட்டுமாறும், ஜனநாயக உரிமைகளை நிலைநிறுத்துமாறும் கோரி மாபெரும் ஆர்ப்பாட்டமும், பொதுக் கூட்டமும் எதிர்வரும் திங்கட் கிழமை கொழும்பில் இடம் பெறவிருக்கின்றன.

ஜே வி.பி, பௌத்த மகாசங்கம், இடதுசாரி முன்னணிகள் ஆகியன உருவாக்கியுள்ள தேசத்தின் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்குமான மக்கள் நிலையம் இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பில் லிப்டன் சுற்றுவட்டத்தில் அன்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெறும் ஆர்ப்பாட்டத்தில் நாட்டின் பல்வேறுபகுதிகளில் இருந்தும் பௌத்த பிக்குகளும், பொதுமக்களும் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதைத் தொடர்ந்து விகாரமாதேவிபூங்காவில் மாபெரும் கூட்டமும் இடம்பெறும்.

இந்தக் கூட்டத்தில் சிங்கள மகா சபைத் தலைவர் மாதுருவாவே சோபித தேரர், ஜே. வி.பி. பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ஸ ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றுவர். (க–3–9)

## விவசாயிகள் ஆர்வம்

வடமராட்சிப் பகுதியில் காலபோக நெற்செய்கைக்கான ஆயத்தவேலைகளில் விவசாயிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

மழையை நம்பியே நெல் வேளாண்மை செய்யும் இப்பகுதி விவசாயிகள் தற்போது வயலில் இருக்கும் ஈரப்பதத்தைப் பயன்படுத்தி வயல்களை உழுதும், வரம்புகளைக் கட்டியும் வருகின்றனர்.

(க-157)



## சாயி சிந்தனை

### பெற்றோரை மதித்து வழிபடு!

உனது பெற்றோரை மதித்து. போற்றி வழிபடு. அவர்கள் தான் உனது உண்மையான சொத்து. பெற்றோரின் ஆசி உனக்கு ஆரோக்யத்தையும், செல்வத்தையும் அளிக்கும். உனது நடத்தை நல்லதாக இருக்குமானால் இறைவன் தானாகவே உன்னிடம் வருவார்.

புண்டரீகன் வழக்கமாக பாண்டுரங்கன் கோயிலுக்குச் செல்வது வழக்கம். ஒருநாள் தன் பெற்றோர்களின் சேவையில் முழுமையாக ஈடுபட்டுவிட்டு கோயிலுக்குச் செல்லவில்லை. அதனால் பாண்டுரங்க பகவானே புண்டரீகனைக் காண வந்தார். அப்போது புண்டரீகன் தனது பெற்றோர்களுக்குக் காலைப் பிடித்து விட்டுக் கொண்டிருந்தான்.

புண்டரீகன் தனது சேவையில் மும்முரமாக இருந்ததால் பாண்டுரங்க தேவனை உட்காரச் சொல்லி காத்திருக்குமாறு கேட்டுக் கொண்டான். அவ்வாறு சொல்லியவாறே ஒரு செங்கல்லை எடுத்து பாண்டுரங்கனிடம் கொடுத்தான்.

அந்தக்காலத்தில் நாற்காலிகளோ, சோபாவோ கிடையாது. தன்பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளைத் திருப்திகரமாகச் செய்துவிட்டு புண்டரீகன் தனது வணக்கத்தை பகவான் (கடவுள்)பாண்டுரங்கனுக்குத் தெரிவித்தான்.

புண்டரீகன் பெற்றோரில் வைத்திருக்கும் பக்தியைக்கண்டு பகவான் மகிழ்ந்து அவனை மிகவும் அன்புடன் இவ்வாறு வாழ்த்தினார்.

''உனது நடத்தை நன்றாக இருந்ததால் இறைவன் உன்னைத்தேடி வந்தார். பெற்றோருக்குச் செய்யும் சேவையைவிடச் சிறந்தது எதுவும் இல்லை. பெற்றோருக்குச் செய்யும் சேவையை இறைவனுக்கே செய்வதாகக் கருது.''

(சனாதனசாரதி 1998 மார்ச்)

# படைத்தலைமையகங்கள், முகாம்கள் கொழும்புக்கு வெளியே மாற்ற முடிவு

## அடுத்த வருடம் முதல் கோட்டே பகுதியில் இயங்கும்

கொழும்பு, ஒக. 16

கொழும்பு நகரினுள் அமைந்துள்ள இராணுவ முகாம்கள், சிறைச்சாலைகள் மற்றும் பாதுகாப்புப் பிரிவுகள் நகருக்கு வெளியே கோட்டேப் பகுதிக்கு மாற்றப்படவுள்ளன.

கொழும்பு நகரினுள் போக்குவரத்து நெரிசல் மிக்க பகுதிகளில் படை முகாம்கள், படைத் தலைமையகங்கள். பாதுகாப்புப் பிரிவுகள் (Defence Structures) அமைக்கப்பட்டுள்ளதால், இவற்றின் பாதுகாப்பிற்காகப் பல வீதிகள் மூடப்பட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படவேண்டிய தேவையுள்ளது.

இது பொதுமக்களின் அன்றாட செயற்பாடுகளைப் பெரிதும் பாதிப்புடன் நகர அபிவிருத்தியும் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதை அடுத்துக் கொழும்புக்கு வெளியே கோட்டே பெலவத்தப் பகுதிக்கு இவை அடுத்த வருடம் இடம் மாற்றப்படவுள்ளன.

கொழும்பு மாநகரினுள் தற்போது பெருமளவு பிரதேசத்தை முப்படைத் தலைமையகங்கள், முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் பிடித்துள்ளன.

இவை யெல்லாவற்றையும் கொழும்புக்கு வெளியே மாற்ற 2002 ஆம் ஆண்டு இறுதிவரை செல்லும் என நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதி இயக்குநர் நாயகம் கே. வீ. தர்மசிறி தெரிவித்தார்.

நகரின் முக்கியமான பல பகுதிகளை இந்தப் பாதுகாப்புப் பிரிவுகள் ஆக்கிரமித்துள்ளதால் அவற்றை நகரில் இருந்து அகற்றி நகரை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியம் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலை கொழும்புக்கு வெளியே மாற்றப்படவுள்ளதாகவும் அவர் சொன்னார்.

அதேவேளை —

கட்டுநாயக்காவில் இடம்பெற்ற தாக்குதலும் நகரில் இருந்து பாதுகாப்புப் பிரிவுகளை இடமாற்றுவதற்கு ஒரு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க–5)

உதயன்

## குரங்கின் கைப்புண்

'குரங்கின் கைப்புண்' என்று ஒரு முதுமொழி நம் மத்தியில் கூறப்படுவதுண்டு. குரங்கின் கையில் புண் ஏற்பட்டால், அது புண் என்று தெரிந்தும் அதை ஆறவிடாது அந்தப் புண்ணை அவ்வப்போது பார்த்துப் பார்த்துச் சொறிந்து சொறிந்து பெரிதாக்கி, ரணமாக்கித் துடிக்குமாம் குரங்கு.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அண்மைக்காலப் பேச்சுக்கள் இந்தப் பழமொழியைத்தான் நினைவூட்டுகின்றன.

நேற்று முன்தினம் தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் இளைஞர் கழகங்கள் மற்றும் சமூக நலன் அமைப்புகளின் பிரதிநிதிகள் மத்தியில் அவர் உரையாற்றும்போது குறிப்பிட்ட சில கருத்துக்கள் இனப்பிரச்சினை என்ற புண் புரையோடி இருப்பது குறித்தும் அதன் பின்னணி குறித்தும் அவர் நன்கு உணர்ந்திருக்கின்றார் என்பதைக் காட்டுகின்றன.

"கடந்த தசாப்தங்களில் இலங்கையில் இளைஞர்களுக்கு ஏற்பட்ட அழிவுகள்போன்று வேறு எந்த நாடுகளிலும் இளைஞர்களுக்கு அழிவு ஏற்படவில்லை. வடக்கு யுத்தம் மற்றும் தெற்குக் கிளர்ச்சி காரணமாகப் பதிந்துள்ள தடங்கள் இதனைத்தான் காட்டுகின்றன. இந்தத் தடங்களை அகற்ற இன்னும் பல வருடங்கள் பிடிக்கும்.

"தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. கடந்த கால அரசு இத்தகைய பாதையில் சென்றதால்தான் எட்டு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இன்று புலம்பெயர்ந்து வாழும்நிலை ஏற்பட்டது. இதனால்தான் புலிகளுக்கு உதவ வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. விடுதலைப் புலிகளின் தலைமையை ஒழிப்பதனால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டுவிடப்போவதில்லை. சகல தரப்பும் இணைந்து யுத்தத்துக்குத் தீர்வுகாண முன்வரவேண்டும்" - இப்படி ஜனாதிபதி குமாரதுங்க குறிப்பிட்டிருக்கின்றார்.

இனப்பிரச்சினையும் போரும் தொடர்வதால் நாட்டுக்கு ஏற்படப்போகும் அழிவையும் அவர் தமது உரையில் விலாவாரியாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

அதாவது இனப்பிரச்சினை என்ற புண் புரையோடி இருப்பது அவருக்கு நன்கு புரிந்திருக்கின்றது. அதை வெளிப்படுத்தியிருக்கின்றார். அந்தப் புண்ணுக்கு - இனப்பிரச்சினைக்கு - சரியான மருந்து அரசியல் தீர்வுதான் என்பதையும் அவர் தமது உரைகளில் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

புண்ணும் தெரிந்து, மருந்தும் புரிந்தால், புண்ணுக்கு மருந்தைப் பூசி ரணத்தை ஆற்றுவதுதானே? ஆனால் அதை அவர் செய்கின்றாரா என்றால் இல்லை என்றுதான் பதில் கூறவேண்டியிருக்கின்றது.

தமது வழமையான 'சணம் பித்தம்; சணம் வாதம்' போக்குப்படி, ஒரு தடவை "புலிகளின் தலைமையை அழிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது" - என்று கூறி அமைதித் தீர்வை - சமாதான வழியை - நாடுபவர் போல தன்னைக் காட்டிக் கொள்கின்றார் அவர். மறுதடவை "புலிகளை அழித்துப் பிரபாகரனை ஓரங்கட்டி - நாட்டில் சமாதானத்தை - அமைதியை ஏற்படுத்துவேன்" என்று மார்தட்டி, ஆயுதங்களை வாங்கிக் குவித்து, படைக்கு ஆள்களை அளவுக்கதிகமாகத் திரட்டி போர் நிலைமையை - இனப்பிரச்சினை நெருக்கடியை - மேலும் மேலும் சிக்கலாக்குகின்றார்.

இவ்வாறு கையிலிருக்கும் புண்ணுக்கு மருந்து தெரிந்தும் அதைப் பயன்படுத்தாமல், புண்ணை மேலும் ஆழமாக்கி, ரணப்படுத்தும் ஜனாதிபதியின் பேச்சை - செயலை - 'குரங்கின் கைப்புண்' என்று கூறுவதில் என்ன தப்பிருக்கப் போகின்றது?

கைப்புண்ணுக்கு மருந்து செய்யாமல் அதை மேலும் மேலும் ரணமாக்கினால் விளைவு கையைமட்டும் பாதிக்காது ஆளையே முற்றாக பாதித்துவிடும் என்பதை ஜனாதிபதி உணர்ந்து கொள்ளவேண்டும்.

# இராணுவ முகாம்கள் தோறும் மனித உரிமை அறைகள்!

கொழும்பு,ஓக.16

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஒவ்வோர் இராணுவ முகாமிலும் மனித உரிமை அறைகள் (Human rights cell) அமைக்கப்பட்டுள்ளன. மூன்று இராணுவ அதிகாரிகள் ஒவ்வொரு மனித உரிமை அறையிலும் கடமையில் இருப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

மனித உரிமை மீறல் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகப் பொதுமக்கள் தங்கள் முறைப்பாடுகளை அங்கு சமர்ப்பிக்கலாம். அம்முறைப்பாடுகள் குறித்து மனித உரிமை பேணலுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுப்பார்கள்.

இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் திருகோணமலைப் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் சேனக திஸநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

இராணுவத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இராணுவத்தினருக்கு மனித உரிமை பேணல் தொடர்பான கருத்தரங்கு மாத இறுதியில் நடத்தப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

(க)

## நாட்டு நடப்பு

**நல்லைத் திருப்பள்ளி எழுச்சி**

கீதங்கள் பாடி பணிந்தோமுன் பாதம்
கேட்டிருக்காதென நம்புகிறோம் நாம்
ஏழைகளாகி அலைந்திடும் எம்மவர்க்கு
எவரும் இதுவரை இரங்கிடவில்லை
பூதலத்தினில் நாம் படும் வேதனை
புரியாதென எண்ணுகிறோம் யாம்
காதலாகி நின் கருணையை வேண்டிட
கதிரொளி வேலவா! பள்ளி எழுந்தருளாயே!

*- விகடகவி.*

# நாடாளுமன்றத்தை உத்தியோகப்பற்றற்ற முறையில் நாளை கூட்டுவதற்கு எதிரணிக் கட்சிகள் தீர்மானம்

## ஜே.வி.பியினர் கடும் எதிர்ப்பு

கொழும்பு,ஓக.16

115 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட எதிரணிக்கட்சிகள் நாளை வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற குழு அறையில் முக்கிய கூட்டம் ஒன்றை நடத்துவதென முடிவு செய்துள்ளன.

நேற்று முன்தினம் கூடிய எதிரணிக் கட்சிகளின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

உத்தியோகப்பற்றற்ற முறையில் நாடாளுமன்ற அமர்வை நாளை நடத்தவேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய பல தலைவர்களும் வலியுறுத்திப் பேசினர்.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, "இன்றுள்ள சூழ்நிலையில் நாடாளுமன்றத்தை உத்தியோகபூர்வமாகக் கூட்ட வேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அதைவிடுத்து உத்தியோகப் பற்றற்ற முறையில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதால் பயனில்லை. நாடாளுமன்றத்தை முறைப்படி கூட்டி எதிர்கால நடவடிக்கை குறித்து ஆராயலாம்" என்று தெரிவித்தார்.

நாளை நாடாளுமன்ற அமர்வை நடத்தி புதிய சபாநாயகராக ஜோன் அமரதுங்கவைத் தெரிவுசெய்து நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்று அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்த விடயத்தை ஜே.வி.பி. எதிர்த்ததை அடுத்து அந்த விடயம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, பிரதம நீதியரசருக்கு எதிரான குற்ற விசாரணைக்குழு அமைக்கும் பிரேரணை, ஐந்து சுதந்திர ஆணைக்குழுக்கள் அமைத்தல் போன்ற விடயங்கள் நாளைய கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றன.

இதற்கிடையில் நாடாளுமன்றத்திற்கு சென்ற எதிரணி எம்பிக்களைத் தடுத்த பொலீஸார் மீது இதுவரை பொலீஸ் மா அதிபர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகையால் எதிர்வரும் 7ஆம் திகதி பொலீஸ் மா அதிபரை விசாரணை செய்வதற்காக நாடாளுமன்றத்திற்கு அழைக்க வேண்டும் என சபாநாயகரை கேட்டுக்கொள்வது, பிரதம நீதியரசரின் ஒழுக்கம் தொடர்பாக ஆராய நாடாளுமன்றத் தெரிவுக் குழு உடனடியாக நியமிக்கப்பட வேண்டுமெனக் கோருவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வின் போது என்ன என்ன விடயங்கள் ஆராயப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்க கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்த வேண்டும் என சபாநாயகரை கேட்டுக்கொள்வது எனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

அரசமைப்பின் 17ஆவது திருத்தச் சட்டமாக 5 ஆணைக்குழுக்களை கொண்ட பிரேரணையை முன்வைப்பது, எதிரணிக்கட்சிகள் அரசாங்கத்தின் மீது கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை செப்டெம்பர் 7ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, டிரோன் பெர்னாண்டோ, டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, மக்கள் விடுதலை முன்னணி பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, ரெலோ எம்.பி. அடைக்கலநாதன், சிஹல உறுமய எம்.பி. சம்பிக்க ரணவக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

(க-3)

## எழுவைதீவில் மீண்டும் 'கிளினிக்'

ஊர்காவற்றுறை,ஓக.16

எழுவைதீவு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக செயற்படாமல் இருந்துவரும் கர்ப்பவதிகள் மற்றும் குழந்தைகளுக்கான 'கிளினிக்'குகள் இன்று முதல் ஆரம்பிக்கின்றன்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொறுப்பதிகாரி ச.திவ்வியகுமாரன் தலைமையில் இன்றைய ஆரம்ப வைபவம் இடம்பெறும்.

ஒவ்வொரு மாதமும் மாதத்தின் மூன்றாவது வியாழக்கிழமைகள் தோறும் இங்கு மேற்படி 'கிளினிக்'குகள் நடத்தப்படவுள்ளன.

இதுவரை காலமும் இந்த 'கிளினிக்'குகள் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-16)

## நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம்

# ரூ. 20 லட்சம் செலவில் அமைத்து வரும் புதிய படகு விரைவில் சேவைக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.16

நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம் 20 லட்சம் ரூபா செலவில் அமைத்து வரும் புதிய படகு ஒன்று எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் சேவைக்கு விடப்படும் என்று சங்கத்தின் உப தலைவர் சு.கணேசலிங்கம் தெரிவித்தார்.

இந்தப் புதிய படகின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன என்றும் படகின் பணிகள் பூர்த்தியடைந்ததும் தீவுப்பகுதிக்கான உணவுப் பொருள்கள் மற்றும் பயணிகளை ஏற்றி இறக்கும் சேவைக்கு விடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம் நெடுந்தீவுக்கு விஜயத்தை மேற்கொண்ட உலக வங்கிப் பிரதிநிதிகள் மேற்படி புதிய படகின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டுச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

(க-17)

## கைப்பணித் தொழிலில் ஈடுபட்டுள்ளோரை ஊக்குவிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

### பிரதேச செயலர் பிரிவு ரீதியாக கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.16

கைப்பணித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்குவிப்பதற்காக பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அமைக்கப்பட்டுள்ள கைப்பணியாளர் முயற்சி அபிவிருத்திச் சங்கங்கள் மூலமாக திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றன.

கைப்பணித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுக்கு வழங்க வேண்டிய உதவிகள் ஆகியன தொடர்பாக இந்தக் கூட்டங்களில் ஆராயப்படவிருக்கின்றன.

யாழ்.மாவட்ட தொழில்துறை அலுவலர் செல்வி ஆ.பிரபாகரி இந்தச் கூட்டங்களை நடத்திவருகின்றார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சங்கானைப் பிரதேசசெயலர் அலுவலகத்திலும் - மறுநாள் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அலுவலகத்திலும் - இத்தகைய கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

(க-3)

### நாளை

ஆவணி 01
வெள்ளிக்கிழமை
திதி: திரயோதசி
பிற்பகல் 2.00 வரை
நட்சத்திரம் : புனர்பூசம்
முற்பகல் 9.01 வரை.
சுபநேரம் : 6.05 - 7.35
ராகுகாலம் : 10.35 - 12.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பிறர் தூற்றுவதைக் கண்டு நடுங்கும் பொதுத் தொண்டனால் நாட்டுக்குத் தீமை விளையும். அதைவிட அதிக தீமை, பிறர் வாழ்த்துவதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்ற பொதுத் தொண்டனால் நாட்டுக்கு ஏற்பட்டுவிடும்.

## யாழ்.நீதிமன்றம் விடுதலை செய்து

# இந்தியக் கடற்படையிடம் ஒப்படைத்த மீனவர்களில் ஐவரைக் காணவில்லை

யாழ்.நீதிமன்றத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டு இலங்கைக் கடற்படையால் இந்தியக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்ட 19 இந்திய மீனவர்களில் ஐவரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 19 மீனவர்களை கடலில் வைத்துப் பொறுப்பேற்ற இந்தியக் கடற்படையினர் அவர்களை நான்கு வள்ளங்களில் செல்ல அனுமதித்தனர் என்றும் -

இவர்களில் ஐவர் தொடர்பாக இதுவரை தகவல் ஏதும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்கொந்தளிப்புக் காரணமாக இவர்கள் திசைமாறிச் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுவதாகவும் -

இந்தியக் கடற்படை இவர்களைத் தேடிவருவதாகவும் - கூறப்பட்டது.

(க-3-9)

### கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



*மதிற்கரை, வேலியோரம்
மாபெரும் ஆபத்துண்டு.
பதுங்கிக் கிடக்கும் சிறுகண்ணி
பற்றையில் மறைந்துகிடக்கும்.
மதிற்பக்கம் நீ நடமாடினால்
படாரென வெடிக்கும் கண்ணி!*

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பருத்தித்துறை, புலோலி வடக்கு, இல.14, விஸ்வகுல வீதியைச் சேர்ந்த இரத்தினகோபால் வனிதா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.616081063X) கடந்த 09.08.2001 இல் திருகோணமலையிலிருந்து கப்பலில் வந்து தெல்லிப்பழை சோதனைச் சாவடியைக் கடந்த பின்னர் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்து தவவும். (91238)

### விற்பனைக்கு

ஐஸ்கிறீம் பிளான்டுகள், வுட்லன்ஸ், டீபிறிஜ்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 42/6, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (91241)

ஜெனறேற்றர் (டீசல் என்ஜின் 31/2 K.V. டைனமோ), போட்டோக் கொப்பியர் 1016 - Sharp, லெமினேறறிங் மெசின் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 254 அல்லது 368, சிவன் கோயிலடி, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P: 021-2810. (91099)

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

நல்லின கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இலக்கம் 02, வெங்கடேசன் வீதி, (பெருமாள் கோயில் வீதி) யாழ்ப்பாணம். (91232)

### தவறிவிட்டது

ஆண்களுக்கான கைச்சங்கிலி (11/2பவுண்) ஒன்று இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயிலுக்கும் இணுவில் சிவகாமி அம்மன் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில் குருக்களுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (91231)

உக்கிளாங்குளம், வவுனியா என்னும் முகவரியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சுமதி என்பவரது தேசிய அ.அட்டை.(இல.807792121V) காரைநகருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லிங்கம் ஸ்ரோர், இல.168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (91245)

### படிவம்

ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெறாத ஆசிரியர்கள் தொடர்பான விவரப்பத்திரம் - 2001 விற்பனையாகின்றது. முடிவு திகதி: 2001-09-10. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/17872)

### விற்பனைக்கு

திருவாசகம், திருப்புகழ், திருவருட்பா, தாயுமானவர் பாடல்கள், ஔவையார் அருளியவை, பகவத் கீதை, நற்சிந்தனை, இன்னும் பல தெய்வீக நூல்கள் இருக்கின்றன. தொடர்பு: 135, சிவன் கோயில் முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம்.(91131)

நல்லின (பெரிய இன) ஆடும் குட்டியும் (பால் தந்து கொண்டிருக்கும் நிலையில்) விற்பனைக்கு உண்டு. F.X. நீக்கலஸ், நாச்சாண்டி ஒழுங்கை, (யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் பின் ஒழுங்கை) வட்டுக்கோட்டை.(91212)

பல இன கலர் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:ஐ.குட்டி, 40/17 (16/16), சீனியர்லேன், யாழ்ப்பாணம். (நண்பகல் 12மணிக்குப் பின் பார்வையிடலாம்) (91216)

### நாடகம்

யாழ்.சேனையில் எல்லோரும் வாழ வேண்டும் நாடகத்தைக் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. நாடகம் எழுதுவது எப்படி? 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல் 3. யாழ்ப்பாணம் 4. இலக்கியக் கட்டுரைகள். (91213)

### வீடு விற்பனைக்கு

யாழ்.பல்கலைக்கழகம், சென்றல் நேர்சிங் ஹோம் அருகில் சகல வசதிகளுடனும் வீடு விற்பனைக்குண்டு தொடர்பு: T.VIJAYARATNAM, 7, TEMPLE ROAD, JAFFNA. TEL.2383. (91246)

### காணி விற்பனைக்கு

சுன்னாகத்தில் நல்ல மண்வளம், நீர்வளம் உள்ள தோட்டமும், புலமும் சேர்ந்த ஒவ்வொன்றும் ஏறக்குறைய 50 பரப்பு விஸ்தீரணமான இரு காணிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. இராஜேந்திரம், மே/பா. எஸ். பீ.சிவஞானம், சட்டத்தரணி, இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (91247)

### சில பாடசாலைகளில் மின்சாரம் துண்டிப்பு

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள சில பாடசலைகளின் மின் இணைப்புகள் மின்சார சபையினால் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இப்பாடசாலைகளின் மின்கட்டணம் காசோலைகள் மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்ட போதிலும், அவை கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கான மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால், இவ்வித்தியாலயத்தில் இயங்கும் தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தின் கணனி உட்பட மின் சாதனங்களின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. (க-117)

---

## பாராட்டி நன்றி கூறுகின்றோம்

**தேவசபை பிரார்த்தனை மண்டபம், நெடுந்தீவு**

எமது பிரார்த்தனை மண்டபத்தின் புனரமைப்புப் பணிக்கு ரூபா இரண்டு லட்சம் நிதியை ஒதுக்கீடு செய்து உதவியமைக்காக,



ஈ.ம.ஜ.கட்சியின் செயலாளர் நாயகம்
மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்
ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட
பிரதம அமைப்பாளருமான கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்



நெடுந்தீவுப் பொறுப்பாளர்
**உயர்திரு.கே.நவநீதன்**
**(மோகன்)** அவர்களையும்

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர்
**புலவர் A.W.அரியநாயகம் (J.P.U.M.)**
அவர்களையும்

*மனமார நினைந்து நன்றியுடன் பாராட்டுகின்றோம்.*

*நெடுந்தீவு மத்தி,*
*நெடுந்தீவு.* (91242)

தேவசபை
பிரார்த்தனை மண்டப விசுவாசிகள்.

---

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின்**

கட்டட அமைப்பு, புனரமைப்பு, மின்பிறப்பாக்கி கொள்வனவு செய்தல் ஆகிய வேலைகளுக்காக ஆரம்ப நிதியாக ரூபா பத்து லட்சத்து எழுபத்தையாயிரத்தை தங்களின் அமைச்சு மூலம் ஒதுக்கி, அதில் தற்போது கட்டட வேலைகளை ஆரம்பிக்க ரூபா ஐந்து லட்சத்தினையும், மின்பிறப்பாக்கி கொள்வனவு செய்ய ரூபா எழுபத்தையாயிரத்தையும் வழங்கியமைக்காக,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு
மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்மொழி
விவகாரங்கள் அமுலாக்கல் இந்து கலாசார
மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர்
**உயர்திரு.க.மணிபல்லவராஜன்**
**(நிசாந்தன்)**
அவர்களையும்

மேலும் இந்த நிதி உதவியினைப் பெற பல வழிகளிலும் உதவியாக இருந்த ஏனையோருக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- பரிபாலன சபையினர்.**

அரியாலை வெட்டுக்குளம்
புவனேஸ்வரி அம்பாள் ஆலயம். (91240)

---

## மரண அறிவித்தல்

### ஆசைப்பிள்ளை சிவகுரு

வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட, ஆசைப்பிள்ளை சிவகுரு நேற்று (15.08.2001) புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் சிவஞானவதியின் அன்புக் கணவரும், இரஞ்சிதமலர், ரவிச்சந்திரன், இரஞ்சிதபவானி, இரஞ்சிதநளினி, இரவீந்திரன், இரஞ்சிதமாலா, இரஞ்சிதவதனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2001) வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சீ.தில்லையம்பலம்*
(சகலன்)

*208/7, இராமநாதன் வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.024-20368 (வவுனியா) (91248)

---

## பாராட்டி நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

அபிவிருத்தித் தொண்டர்களாக நியமனம் வழங்கியமைக்காக,



வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு
மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள்
இந்து சமய கலாசார அமைச்சரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
செயலாளர் நாயகமுமாகிய
மாண்புமிகு
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



ஈ.பி.டி.பி. கட்சியின்
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய
கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்



வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர்
**உயர்திரு.பூ.குணசிங்கம்**
(J.P.U.M.)
அவர்களையும்



வலி.கிழக்கு பிரதேச சபை
உபதலைவரும் கோப்பாய் தொகுதி
ஈ.பி.டி.பி. அமைப்பாளருமாகிய
**உயர்திரு.U.L.A.ரவி**
அவர்களையும்

**நன்றியுடன் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

(91243) கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு பரிசோதகர்கள், போதனாசிரியர்கள், அபிவிருத்தித் தொண்டர்கள்.

---

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ/து) பருத்தித்துறை

## பாராட்டி நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைச் சங்கப் பணிமனை கட்டுவதற்கு ரூபா நாற்பது லட்சம் நிதி ஒதுக்கீடு செய்ததில் முதல் கட்டமாக ரூபா இருபது லட்சத்தை உடன் தந்து உதவியமைக்காக,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு
மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார
இந்து சமய கலாசார அமைச்சரும், ஈழமக்கள்
ஜனநாயகக் கட்சியின் செயலாளர்
நாயகமுமாகிய மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமான
**திரு.கா.வே.குகேந்திரன்**
**(ஜெகன்)** அவர்களுக்கும்



எமது சங்கத்தின் நீண்ட காலத் தேவையை
உணர்ந்து புதிய பணிமனை அமைப்பதற்கு
அமைச்சரிடம் எடுத்துக்கூறி நிதி ஒதுக்கீடு
செய்வதற்கு ஒத்தாசைகள் புரிந்த,
பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரும்,
வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
அமைப்பாளருமான
**உயர்திரு.ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**
அவர்களுக்கும்

*எங்களது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறி மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*பரு.பல நோ.கூ.சங்கம்,*
*பருத்தித்துறை.* (C/17871)

பணிப்பாளர்களும்,
பணியாளர்களும்.

---

## நன்றி நவிலல்

### சிவநாதன் சிவரஞ்சன்

எமது அருமைச் செல்வம் சிவரஞ்சன் சடுதியாகக் கொழும்பில் காலமானதைக் கேள்வியுற்று வேதனையுற்ற வேளையில், அன்னாரின் பூதவுடலை விமானம் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவர உதவிய ஈ.பி.டி.பி. யாழ். - கொழும்பு அலுவலக உறுப்பினர்களுக்கும், இன்முகத்துடன் பல்வேறு உதவிகளைப் புரிந்து எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிய சகல அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- சிவநாதன் குடும்பத்தினர்.
*மீசாலை கிழக்கு.*

தற்காலிக முகவரி:
*களஞ்சியந் தோட்டம்,*
*கரவெட்டி கிழக்கு.*

(91239)

# இறந்து கொண்டிருக்கும் அரசாங்கத்திற்கு 'ஒக்சிஜன்' வழங்க ஐ.தே.க. தயாரில்லை!

## காமினி அத்துகோறளை எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,ஓக.16

'தற்சமயம் இறந்து கொண்டிருக்கும் அரசுக்கு 'ஒக்சிஜன்' வழங்க நாம் தயாரில்லை' என்று ஐ.தே.கட்சியின் பிரமுகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி அத்துக்கோறளை தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

இன்றைய அரசின் ஆட்சிக் காலத்தில் நடத்தப்படும் போராட்டங்களில் உயிர்ப்பலி எடுக்கப்படுகின்றது. கடந்த 19ஆம் திகதி ஐ.தே.க. நடத்திய போராட்டத்தின் போதும் இரு உயிர்கள் பறிக்கப்பட்டன.

அராஜகத்தின் உச்சக்கட்டத்தில் உள்ள அரசு போராட்டங்களை நசுக்க முனைந்து செயற்படுகின்றதே தவிர, ஜனநாயகத்தை நிலைநாட்ட ஆர்வம் காட்டவில்லை - என்றார்.

ரணில் விக்கிரமசிங்க பேசுகையில், இன்றைய ஆட்சியில் நடுத்தர வர்க்கத்தின் மரண அத்தாட்சிப் பத்திரங்கள் எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று கூறினார்.

பிரதித் தலைவர் கருஜயசூரியா உட்படப் பலர் அங்கு உரையாற்றினர். (க-3)

## 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் பளை மக்களுக்கு நிவாரணம் வழங்க அமைச்சர் உத்தரவிட்டும் பயனில்லை

தென்மராட்சி,ஓக.16

பளை பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள குறைந்த வருமானம் பெறும் அரச உள்ளூராட்சி, கூட்டுறவு ஊழியர், வர்த்தகர்கள், ஓய்வுதியர் உட்பட 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு தொடர்ந்து நிவாரண உலர் உணவுப் பொருள்கள் வழங்குமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டும் இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லையெனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - மீளாய்வின் பின்னர் நிறுத்தப்பட்ட 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு நிவாரணம் வழங்க அனுமதி கோரி பளை உதவி அரசாங்க அதிபர், யாழ். அரச அதிபருக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இடம்பெயர்வினால் பல கஷ்டங்களை அனுபவிக்கும் 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போர் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடியதை அடுத்து இந்தக் குடும்பங்களுக்குத் தொடர்ந்து நிவாரணம் வழங்குமாறு அமைச்சர் உரிய அதிகாரிகளைப் பணித்திருந்தார் என்றும் - ஆனால் இதுவரை இந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும் பாதிக்கப்பட்ட 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருக்கும குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். (க-117)

## கடற்றொழிலாளர் சங்கத்தினருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.16

கைதடி - நாவற்குழி தெற்கைச் சேர்ந்த கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களை நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். மணியம் கட்டடத்தில் உள்ள மனித கௌரவத்திற்கான மன்றத்துக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் ஏற்கனவே பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 40 பேரையும் தவறாது வருகை தருமாறு மன்றத்தின் இணைப்பாளர் கேட்டுள்ளார். (க-10)


## யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

அனைத்து அங்கத்தவர்களுக்குமான பொதுக்கூட்டம் நாளை (17-08-2001) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரியகுளத்தடியிலுள்ள புதிய உயர்கலைக் கல்லூரியில் நடைபெறும். அனைவரும் தவறாது கலந்துகொள்ளவும்.

வே.மணிமாறன்
தலைவர்

(91251)



## UNIVERSITY OF JAFFNA
## SRI LANKA
## VACANCIES

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 28.09.2001 for the undermentioned post.

**1. ASSISTANT NETWORK MANAGER, GRADE II**
**2. INSTRUCTOR IN COMPUTER TECHNOLOGY, GRADE II**

Salary Code and Salary Seale:
BS-02-Rs10,800-3x300-11,700 (EB)
12,900-13x375-17,775p.m

*Note:* Allowances will also be paid as approved by the University Grants Commission.

Appointees will become contributors to the University's Provident Fund, contributing 10% of their earnings and the University contributing an amount equivalent to 7% of their monthly earnings. In addition they will become contributors to the Employees Trust Fund and the University Pension Scheme under which the University will contribute an amount equivalent to 3% and 8% of the monthly earnings of the employee respectively.

Application forms and other details may be obtained form the office of the **Senior Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka** either in person or by sending a Money Order for Rs 20/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23x10cm in size.

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications recrived after the closing date will be rejected without intimation.

**REGISTRAR,**
*University of Jaffna.*
*Sri Lanka.*
*15th August, 2001.*

(C/17874)



# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வித் திணைக்களம் – வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 24-08-2001 ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே மு.ப. 10.30மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர்/அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம் வாகனத்தரிப்பிடம் அமைத்தல் 24' - 0"X 12'-0" | 250/= | 1,400/= |

01. மேற்படி வேலை இக்ராட்(ICTAD) நிறுவனத்தின் எம் -9உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்கள்.
02. கேள்விப் பத்திரங்களில் பொருள்கள் சேவைகள் வரி(G.S.T) சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பொருள்கள் சேவைகள் வரி (G.S.T) சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.
03. வேலைகளுக்கமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப்பணத்தை வலிகாமம் கல்விவலயத்தின் வலயக் கல்விப்பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 16-08-2001 திகதியிலிருந்து 20-08-2001ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் வலயக்கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு, மூலப்பிரதியுடன் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப்பத்திர இணைப் பிரதியினையும், தனித்தனி இருகடித உறைகளில் இட்டு கடித உறைகளின் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு, ஒப்பந்தகாரரின் முத்திரையிடப்பட்டு மருதனார் மடத்தில் உள்ள வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் 2001ஆம் ஆண்டு ஓகஸ்ட் 24ஆம் திகதி மு.ப. 10மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்துக்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
05. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 3மாத காலத்துக்குள் கட்டடவேலைகளைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், மேலதிக விவரங்களை பாடசாலைக் கட்டடவேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வீ.இராசையா,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

*மருதனார் மடம்,*
*சுன்னாகம்.*
*15-08-2001*

(C/17800)



# 31ஆம் நாள் நீங்காத நினைவலைகள்

எமது நெஞ்சத்துப் பாறைகளில் அழியா ஓவியமான
எமது பாசமிகு தாய்



## திருமதி சிற்றம்பலம் நிர்மலா

புவியிலொரு கனியாக 20-02-1953
வானிலொரு ஒளியாக 17-07-2001

திதி: ஆடிமாத அபரபக்கத் துவாதசி

பாசத்தைப் பேராறாய்ப் பாயச்சி வளர்த்தீர்கள்!
நேசித்த நெஞ்சமதை நெடுங்கனலோ பொசுக்கியது!
வாடாமலர் போலிருந்து வாஞ்சை மழை பொழிந்தீர்கள்!
ஓடமனம் வந்ததுவோ உன்நினைவாய்த் தேம்புகிறேன்
அம்மா என்றழைக்கையிலே அடைந்த இன்பம் கோடியம்மா!
இம்மாநிலத்திலெனக் கித்துயரேன் தந்தீர்கள்?
நெஞ்சம் இருக்குமட்டும் நினைத்திருப்பேன் அம்மாவே!
தஞ்சம் இறையடியோ சாந்தியுனக் கங்கமைக!

இன்று (16-08-2001) வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், எதிர்வரும் (19-08-2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள சபிண்டீகரணக்கிரியைகள் மற்றும் மதியபோசன நிகழ்விலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*'சிவகிரி'*
*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.*

தங்கள் நினைவுடன்
என்றும் வாழும்:
மகன்

(C/17873)

# வாஷிங்ரனில் அடுத்த மாதம் புஷ் - சந்திரிகா சந்திப்பு?

கொழும்பு,ஒக.16

அடுத்த மாதம் நியூயோர்க்கில் நடைபெறும் சிறுவர்கள் தொடர்பான ஐ.நாவின் விசேட கூட்டத்தில் பங்கு பற்றுவதற்காக அங்கு செல்லும் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அங்கு பெரும்பாலும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷைச் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தரும்படி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தை இலங்கை வெளிவிவகார அமைச்சு கோரியிருக்கின்றது.

வாஷிங்ரனில் இரு ஜனாதிபதிகளும் அனேகமாக செப்ரெம்பர் 23 ஆம் திகதி சந்திப்பர் என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் நம்பிக்கை தெரிவித்தார்.

"என்றாலும் அமெரிக்க இராஜங்க அமைச்சிடமிருந்து சாதகமான பதில் இன்னும் கிடைக்கவில்லை" - என்றும் அவர் குறிப்பிட்டார்.

செப்ரெம்பர் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ள சிறுவர்கள் தொடர்பான ஐ.நாவின் இந்த விசேட கூட்டத்தில் தாங்கள் பங்குபற்றுவதை இலங்கை, அமெரிக்க ஜனாதிபதிகள் உட்பட 75 நாடுகளின் தலைவர்கள் இதுவரை உறுதிப்படுத்தியுள்ளனர்.

சிறுவர்கள் விவகாரம் தொடர்பாக சர்வதேச ரீதியில் நடைபெறும் மிக உயர்ந்தநிலைக் கூட்டம் இது என்பதும் -

உலக நாடுகளின் தலைவர்கள் பெரும் எண்ணிக்கையில் கூடும் முக்கிய நிகழ்வு இது என்பதும் - குறிப்பிடத்தக்கவையாகும்.

(உ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 29 - 01 - 1975

உதிர்வு 16 - 08 - 2000

### அமரர் கமலேஸ்வரன் ரமேஸ்வரன்

ஆண்டு ஒன்று சென்றாலும்
அகிலத்தில் நாங்கள் இருக்கும் வரை
உங்கள் நினைவுகள்
நீண்டு கொண்டே போகும்...
இது பொய்யல்ல!

உன்பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
பெல்சியா, டெல்சியா, றெலன்சியா, பௌசியா. } சகோதரிகள்

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

(91204)

## நெஞ்சைவிட்டகலா முதலாண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 13 - 09 - 1950

அரக்கர் பிடியில் 27 - 07 - 2000

### அமரர் கார்த்திகேசு இராசசேகரன்

(நெருப்பன்)

திதி: 16.08.2001அபரபக்கத் துவாதசி

**மின்னல் உடனே ஓடி ஒளிந்து கொண்டது**
**இரவில் கூட வெளிச்சமாய் இருந்த நீ**
**ஒரு விடியலில் இருளாகி விட்டாயே!**
**ஒரு மயில் தோகையை ஈசல் இறகைப் போல்**
**பாவிகள் உதிர்த்து விட்டனரே!**
**கண்ணீர்ப் பிசின் இதய அறைகளை**
**இறுக்குகின்றதே!...**

உன் ஆத்ம சாந்திக்காய் வேண்டும்:
தாய்: கா.புவனேஸ்வரி
சகோதரர்கள்:
கா.கமலசேகரன் குடும்பத்தினர் (கனடா)
கா.சிவசேகரன் குடும்பத்தினர் (கனடா)
கா.குணசேகரன் குடும்பத்தினர் (கனடா)
கா.ஆனந்தசேகரன் குடும்பத்தினர் (சுவிஸ்)
சகோதரிகள்:
திருமதி பு.மனோரஞ்சிதமலர் குடும்பத்தினர் (கனடா)
திருமதி ச.புஸ்பரஞ்சிதமலர் குடும்பத்தினர்
ஒன்றுவிட்ட சகோதரி:
திருமதி கு.சிவபாக்கியம் குடும்பத்தினர் (கனடா)

முகவரி:
'பிருந்தாவனம்'
*பத்தமேனி, அச்சுவேலி.*

(91136)

## பயணிகள் தங்குமிட கட்டடம் விரைவில் திறப்பு

வடமராட்சி,ஓக.16

பருத்தித்துறை பஸ்நிலையத்தில 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் பயணிகள் தங்குமிட கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மூலதன நிதியிலிருந்து பருத்தித்துறை நகரசபையால் இக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடம் பயணிகளின் பாவனைக்காக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (க-173)

## ச.ச.நிலையங்களுக்கு கொடுப்பனவு

வடமராட்சி,ஓக.16

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் உள்ள 14 சனசமூக நிலையங்களுக்கு இவ்வாண்டுக்கான உதவி நன்கொடை இம்மாத இறுதியில் வழங்கப்படவுள்ளது.

இதற்கென வடக்கு - கிழக்கு மாகாண சபை வழங்கிய மூலதன நிதியிலிருந்து 17 ஆயிரத்து 500 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(க-173)

## உடுப்பிட்டியில் பால் சேகரிப்பு நிலைய திறப்பு விழா

வடமராட்சி,ஓக.16

உடுப்பிட்டியில் பால் சேகரிப்பு, விற்பனை நிலையம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குத திறந்து வைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐயூரங்கேஸ்வரன் இதனைத திறந்து வைப்பார்.

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டாவது பால் சேகரிப்பு, விற்பனை நிலையம் இதுவாகும். (க-173)

## நெசவு போதனாசிரியர் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ்மாவட்டத்தில் உள்ள தொழில் துறை திணைக்களத்தில் பணிபுரியும் அமைய நெசவுப் போதனாசிரியர்களின் விவரங்களை திருகோணமலையில் உள்ள தொழில்துறைத் திணைக்களம் கோரியுள்ளது.

இந்த விவரங்களை அனுப்ப வசதியாக சகல போதனாசிரியர்களும் தமது பிறப்புச் சான்றிதழ், விவாகப் பதிவுச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ் ஆகியவற்றை யாழ். செயலகத்தில் உள்ள தொழில் துறைத் திணைக்கள மாவட்ட அலுவலகத்தில் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

(க-3)

## மனித உரிமை ஆணைக்குழுவினர் சந்திப்பு

வவுனியா,ஓக.16

ஸ்ரீலங்கா பொலீஸாரால் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூவரை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியாக்கிளை அதிகாரிகள் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி கைது செய்யப்பட்ட - விசுவமடுவைச் சேர்ந்த ஆறுமுகம் அசோகன், கடந்த ஜுன் மாதம் 23ஆம் திகதி கைது செய்யப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த காளிக்குட்டி சிவசீலன், கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் நடேசு ஆகிய மூவரையுமே அவர்கள் பார்வையிட்டுள்ளனர்.

(க-3-9)



## தேவை

சங்கானையில் இயங்க இருக்கும் சினிமா தியேட்டருக்கு (CINEMA THEATRE) ஒப்பறேட்டர் தேவை. எதிர்வரும் (19.08.2001) ஞாயிறு காலை 9 மணி தொடக்கம் 2 மணி வரை நேரில் சமுகம் தரவும்.

- முகாமையாளர்.

நிரஞ்சனாஸ்,
சங்கானை. (91143)


## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்



(இன்று இருபத்தி மூன்றாம் திருவிழா - சப்பரம்)

### மகிழ்ந்தேற்றே அருள்தர வா!

**பேரானே பிரணவஞ்சொல் பேருரானே**
**அடியவர் மேல் அன்புமற வாதகோனே**
**நேரான தந்தையும்நீ மற்றுமுள்ள**
**நெறியாளர் எத்தனையோ எல்லாம் நீயே**
**தீராத தொன்றுமில்லைக் கடைக்கண் பார்த்தால்**
**திருப் பேறும் அருட்பேறும் அடைவோம் நாங்கள்**
**மாறாத தமிழ் மலரால் மாலை தந்தோம்**
**மகிழ்ந்தேற்றே அருள்தரவா நல்லூர் நாதா**

- சந்திர சிவம் -

### சங்கடம் மாய்க்கச் சப்பரமேறாய்!

சித்தர்கள் நால்வர்க் கன்று சின்குறி வாயிலாக
செம்மை செய் சீலன் தன்னின் சீர்மிகு மைந்தா – என்றும்
நித்தனாய் ஞாலந் தன்னில் நிலை கொளும்
நெடுவேல் தாங்கும் நீசர் கொல் கந்தா – குன்றில்
உத்தமனாக வாழும் ஊர்தியாய் மஞ்ஞை கொண்ட
உம்பருக் கருளும் நல்ல இருவரின் பந்தா – துன்றில்
முத்தராயெம்மை யாக்கும், மாயையின் மைந்தை
மாய்த்த மேன்மை கொள் நல்லூர்க் கந்தா – இன்று
சித்திகள் நாங்கள் எய்தச் சங்கடம் மாய்ந்து போகச்
சப்பர மேறி வாராய் சீருடன் நீயுமிங்கு!

- ஜெ.பிறேம்குமார்.
கல்வயல்.

### வல்ல சுதன்

*நல்லூ ரிருந்து நமைக்காக்கும் வல்லசுதன்*
*மல்லுக்கு நின்றார் மனதையும் – வெல்லவல்ல*
*நல்லகுரு நாதனிவன். நாளுந் தமிழ்வளர்க்கச்*
*சொல்லிற் தருவான் சுவை.*

*கந்தக் கடவுளைக் காந்தந் தருமுயர்*
*செந்திற் குமரனைச் சண்முகா – னந்தனைப்*
*பந்தமொடு பாச மறுத்தருள் சேந்தனைச்*
*சிந்தையில் வைக்கச் சிறப்பு.*

- அங்குசன்.

### முனகின்ற முகம் பாராய் முருகோனே நீ!

**வடிவேலன் துணைநாடி வந்தேறினேன் – தேர்**
**வடமோடு வலம் வந்துன் வரம் வேண்டினேன்**
**அடிவீழும் அவலங்கள் அழுதேங்கினேன் – இன்னும்**
**மடிந்தோடும் மனிதத்தின் உறவாகினேன்**
**இடிதாங்கும் இடமாக இனம்வாழுமோ – எம்**
**இழி கூலப் பகைவாழ்வு அழிந்தோடுமோ**
**முடிவொன்று (ம்) முடிவாகா முற்றற்றதோ – இங்கு**
**முனகின்ற முகம்பாராய் முருகோனே நீ**
**விடிவொன்று எமைநோக்கி வடிவாகாதோ – எம்**
**வடிவேலே வழிசொல்லி வகை சேராயோ.**

- மானியூர் ரட்ணேஸ்.

### கந்தனே! கடைக்கண்ணில் எமைப்பாரையா!

வேலுண்டு பயமில்லை – மயிலுண்டு துயரில்லை
வேதனை இங்கில்லை என்றாடி னோம்! – இன்று
காலுண்டு கையில்லை – உடலுண்டு உயிரில்லை
உணர்வெலாம் தடுமாறித் தவித்தாடினோம் – திரு
மாலுண்டு, மருகனாம் – மயிலேறு மன்னவன்
மலரடி உண்டென்று மனமாறி னோம் – அட
சேலுண்ட செங்கணாள் சிவகாமி மைந்தனே
சிந்தைநீ இரங்கிடு – சிறப்பாக்கிடு!

- கவிஞர் உக்கிரப் பெருவழுதி.

### நல்லூரான் தந்தருள்வான் நலம்

***வாழ்வு சிறந்திட வையகம் செழித்திட***
***கவலைகள் ஓடியே கடிதினில் - கலைந்திட***
***கோயிலில் ஒருவேளை கும்பிட்டு வேண்டினால்***
***நல்லூரான் தந்தருள்வான் நலம்!***

- கி.அ.தில்லைதாசன்.

# தகுதிகாண் ஆசிரியர் ஆள்சேர்ப்பு:

# 76 பேருக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக.16

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்மொழி மூல அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தகுதிகாண் ஆசிரியர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சையில் தோற்றவுள்ளோர் தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், விண்ணப்பித்த பிரதேச செயலர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தை உறுதி செய்வதற்கான பிரதேச செயலரின் ஒப்பமிடப்பட்ட கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழ், 1997 ஆம், 1998 ஆம், 1999 ஆம் ஆண்டுகளுக்குரிய வாக்காளர் இடாப்பின் பிரித்தெடுப்பிதழ்கள், பாடசாலை விடுகைப் பத்திரம், கல்விச் சான்றிதழ்கள். தொண்டர் ஆசிரியராகக் கற்பித்திருந்தால் அதிபரும் வலயக் கல்விப் பணிப்பாளரும் உறுதிப்படுத்திய கடிதம், வேறு பொருத்தமான சான்றிதழ்கள் ஆகியவற்றின் மூலப் பிரதிகளுடன் நிழற்படப் பிரதிகளையும் சமர்ப்பிக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் அடையாளத்தை நிரூபிக்கும் ஆவணங்களுடனும் பிறப்புச் சான்றிதழில் பெயர் வித்தியாசம் இருப்பின் சத்தியக் கடதாசியுடனும் சமுகமளிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 76 பேரின் பெயர் விவரங்கள்வருமாறு:-

### உடற்கல்வி

நவராஜசிங்கம் சுரேஸ்குமார் (பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்), மைதிலி பூபாலசிங்கம் (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), மரியதாஸ் ஜேதன்சன் பிறேமேந்திரன் (மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்), மனுவல் ருவன்சலாஸ் (பீச் றோட், குருநகர்), சின்னத்தம்பி ஸ்ரீதரன் (லெப்பை வீதி, சோனகதெரு, யாழ்ப்பாணம்), தம்பிநாயகம் ஆர். நித்திலநாயகம் (கதீட்ரல் வீதி, யாழ்ப்பாணம்), எஸ். கோகுலன் (கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு), காசிநாதன் சுதாகரன் (மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு), நடராஜா கந்தலீலா (இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி).

கனகரட்ணம் மகானதந்குமாரி (கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கு), லோகநந்தினி திருக்குமார் (பிள்ளையார் வீதி, திருநெல்வேலி), தம்பிஐயா தர்மதாஸ் (புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர்), யோகேஸ்வரன் நிவாந்தன் (கைலாசபிள்ளையார் வீதி, யாழ்ப்பாணம்), கதிர்காமநாதன் சிவகரன் (3 ஆம் கட்டை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்), வரதராஜப்பெருமாள் சுகிர்தகௌரி (மிலாகிரிய அவெனியூ, கொழும்பு), சிவநேசன் சபாநாதன் (கொக்குவில் மேற்கு, கொக்குவில்), கவிதா இரட்ணராஜா (பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி), நாகராஜா விஜயகுமார் (பலாலி வீதி, யாழ்ப்பாணம்), பாலச்சந்திரன் சஞ்ஜீவ் (கோயில் வீதி, நல்லூர்), திருநாவுக்கரசு சசிகலா (முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்).

### கணிதம்

சகாதேவன் சந்திரதாசன் (மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்), சாந்தலிங்கம் கயல்விழி (வளன்புரம், சுவாமியார் வீதி, கொழும்புத்துறை), நடராஜா கேசவன் (அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்), ஞானமுத்து கனிற்றஸ் சந்திரசிறி (பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்).

### சித்திரம்

ஜெயரட்ணம் ரமேஸ்குமார் (அச்சுவேலி தெற்கு அச்சுவேலி), பத்மநாதன் பிரதீபன் (புத்தூர் வீதி, அச்செழு, நீர்வேலி), விநாயகமூர்த்தி குகனேஸ்வரன் (மடத்தடி வீதி, நீர்வேலி தெற்கு), இராசன் இராஜனகுமார் (பழைய கோப்பாய் வீதி, கோப்பாய்).

### ஆரம்பக்கல்வி

செல்வரட்ணம் இராஜேஸ்வரி (பருத்தித்துறை வீதி, நல்லூர்), கந்தசாமி கலைப்பாபு (எழுதுமட்டுவாள் தெற்கு), குகதாசன் விக்னராஜா (மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு), வி. றொக்றிகஸ் சுகன்யா (நெடுங்குளம் வீதி, அரியாலை), கனகரட்ணம் சிறிதரன் (அரசடி வீதி திருநெல்வேலி கிழக்கு), தயகுலினி திவாகரமூர்த்தி (கொக்குவில் மேற்கு), சண்முகராஜா உமேஸ்குமார் (கலட்டி வீதி, கொக்குவில் மேற்கு), ராஜரட்ணம் கீதா (மாரியம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு).

முத்துக்கிருஷ்ண பிள்ளை அசோக்குமார் (பெரியதம்பிரான் வீதி, யாழ்ப்பாணம்), மனோகரன் சிவகலா (செட்டித்தெரு, நல்லூர்).

ஈஸ்வரநாதன் மகேந்திரன் செட்டித்தெரு, நல்லூர்), குகனேசன் சர்மிலா (புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு), [illegible]லிங்கம் ஜெய்க்குமார் (குமரகோட்டம், கோண்டாவில்), சயர்ச்சன சிவம் கலைப்பிரியா (மாரியம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு), சுப்பிரமணியம் கல்யாணி (கடையிற்சுவாமி வீதி, நீராவியடி), விஜிபோரின்பநாயகம் (கலைமகள் வீதி, யாழ்ப்பாணம்), யோகேந்திரன் தயாபரன் (குமரகோட்டம், கோண்டாவில்), சிவாணி சிவபாதசேகரம் (புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு), இராமன் ஜெயதாஸ் (முனியப்பர் கோயிலடி, கோண்டாவில் மேற்கு), இராமச்சந்திரன் அஜந்தா (கொக்குவில் மேற்கு),

சாம்பசிவம் தாரினி (பருத்தித்துறை வீதி, நல்லூர்), கந்தசாமி பகிரதன் (எம்.எஸ். லேன், கோண்டாவில்), சண்முகநாதன் ஜீவகன் (லோட்டஸ் வீதி, வண்ணை மேற்கு), வேலாயுதபிள்ளை தவப்புதல்வன் (............), பஞ்சலிங்கம் கலைந்தினி (நீர்வேலி மேற்கு, கரந்தன்), நல்லதம்பி பாபு (நாவலர் பாடசாலை வீதி, கோப்பாய்), இளங்குணதேவி கந்தசாமி (வாதரவத்தை, புத்தூர்), வசந்தராஜா வினிதா (யாழ். வீதி, உரும்பிராய்), சந்தசாமி வாகீஸ்வரி (செம்பிகலட்டி, இடைக்காடு, அச்சுவேலி).

சுப்பிரமணியம் விக்னவேல் (பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு), எஸ். சிவமதி துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு). ஞானவெளிச்சம் வாட்கின்சன் (உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்), நடராஜா கஜேந்தினி, (தெல்லிபோடை, அச்சுவேலி தெற்கு), வடிவேலு சுபாசினி (முத்துமாரியம்மன் கோயிலடி, அச்சுவேலி), நாகராஜா கபிலன் (பழைய பொலீஸ் நிலைய வீதி, கோப்பாய்), சிவராஜா ஜெகன் யூலன் வீதி, அச்செழு நீர்வேலி), கந்தையா சந்திரகலா (ஊரெழு மேற்கு, சுன்னாகம்), சிவலிங்கம் கீதாஞ்சலி (குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு), தனபாலசிங்கம் விஜயகலா (மடத்தடி உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்) குமாரசாமி கிரிதரன் வளலாய் மேற்கு அச்சுவேலி), பராபரன் விஜயலட்சுமி (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி), ஞானசுப்பிரமணியம் ஞானச்சந்திரன் (புத்தூர் கிழக்கு, புத்தூர்), பத்மநாதன் பரமேஸ்வரன் (நீர்வேலி வடக்கு), குமாரசாமி தார்மினி (புத்தூர் கிழக்கு, புத்தூர்), குணரட்ணம் நிர்மலராஜ் (இராஜ வீதி, கல்வியங்காடு), வல்லிபுரம் சிவலட்சுமி (சேத்தாவடி, இடைக்காடு, அச்சுவேலி), கனகாம்பரம் சஞ்சுலா (அச்சுவேலி வடக்கு), தில்லைநாதன் ஜலஜா (புத்தூர் கிழக்கு, புத்தூர்). (ஐ-10)

## அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

## சுயதொழில் முயற்சிக் கடன்

சட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் 'போருட்' நிறுவனத்தின் உதவியுடன் 150 பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக் கடன்களை வழங்கவுள்ளனர்.

விவசாயம், வியாபாரம், சிறுகைத்தொழில், விலங்கு வேளாண்மை ஆகியவற்றில் ஈடுபடவுள்ளோருக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா விதம் கடன் வழங்கவுள்ளனர்.


## தரிசனம் கருத்தரங்கு

கருத்து: ''வேலைத்தள அழுத்தங்களும் அவற்றை எதிர்கொள்ளலும்''

வழங்குபவர்: வைத்திய கலாநிதி இ. சிவசங்கர்
திரு. இ. ஜெயக்குமார்

காலம்: 19-08-2001 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 10-00 மணி (புதிய நேரம்)

இடம்: கொக்குவில் பொது நூலக கேட்போர் கூடம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''தரிசனம்'' செயற்குழு

விளம்பர நன்கொடை:
கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(91256)


## மரண அறிவித்தல்கள்

### சின்னையா தர்மராசா

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தர்மராசா அவர்கள் 04-08-2001 சனிக்கிழமை அன்று டுபாயில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை – பகவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், ரவீந்திரராணியின் பாசமிகு கணவரும், றொபின்குமார், மைதிலி (A/L 2000 ஆம் ஆண்டு கலைப்பிரிவு, அச்சுவேலி ம. க.), நாட்சாயினி (A/L 2002, அச்சுவேலி மத்திய கல்லூரி), ராஜ்குமார் (10 ஆம் ஆண்டு, அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16 - 08 – 2001) வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

அச்சுவேலி வடக்கு,
பாடசாலை வீதி, அச்சுவேலி.
- குடும்பத்தினர்
(சி/17885)

### சின்னையா தவமணி

அல்வாய் மாறாம்புலத்தை பிறப்பிடமாகவும் மாம்பிராய் வீதி காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் ஆஸ்பத்திரி முன் வீதி நாயன்மார்கட்டை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னையா தவமணி 12.08.2001 அன்று (ஞாயிற்றுக்கிழமை) கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா – பொன்னம்மாவின் அன்பு மகளும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகேசு-பூரணத்தின் அன்பு மருமகனும் ரவீந்திரன் (கனடா), சுபேந்திரன் (ஜேர்மனி), உஷா (ஜேர்மனி), ஜெயந்திரன் (கனடா), யுகந்திரன் (ஜேர்மனி), வன்ஜா, றஜீந்திரன் (கனடா), கிரிஜா, (சுவிஸ்), அனுஜா (யா/கனகரத்தினம் ம. ம. வி.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நளினி (கனடா), ஜெயந்தி (ஜேர்மனி), மனோராஜன் (ஜேர்மனி), குயின்ரா (கனடா), குணசேகரன் (சின்னையா அன்சன்ஸ்), சிவகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஷோபனா, றஜீவன் நயுலன், டிலூஜன், றொபின்சன், நிஜூசன், சுவேதா, நிரோஷன், நிஜர்ஷன், நிதுஷன், யாகுலன், செவின் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இரத்தினம், கனகரத்தினம், இராசமணி, காலஞ்சென்ற மாசிலாமணி, அஸ்வத்தம்மா, பாலசுந்தரம் (பொலீஸ் இன்ஸ்பெக்டர்), பாலசரோஜா, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நடிகமணி V.V. வைரமுத்து, குருநாதன் (JP) காலஞ்சென்ற சின்னத்துரை (29/4270 பிளிபஸ் உரிமையாளர்), பூமேஸ்வரி, மார்க்கண்டு, காலஞ்சென்றவர்களான கந்தசாமி (ரெயிலர்) அப்புத்துரை மற்றும் தங்கத்துரை, யூலியா ஆகியோரின் அன்பு மைத்துனரும் அன்னம்மாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16-08-2001), வியாழன் அன்று அன்னாரின் இல்லத்தில் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-

திருமதி வனஜா குணசேகரன் (மகள்)
ஆஸ்பத்திரி முன் வீதி,
நாயன்மார்கட்டு.
(91262)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து சிதம்பரநாதன்

(இளைப்பாறிய ஊழியர், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, சிவகுரு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிதம்பரநாதன் நேற்று (15-08-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து—பாக்கியம் தம்பதியரின் அருமை மகனும் தருமநாயகியின் அன்புக் கணவரும் மீரா (சுவிஸ்), மதுரா ஆகியோரின் அருமைத் தந்தையும் காலஞ்சென்ற சிவகாமசுந்தரி, மகேஸ்வரி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்—அன்னம்மாவின் மருமகனும் செந்தில்குமரனின் அருமை மாமனாரும் சாரங்கனின் அருமைப் பேரனும் வசந்தி, செந்தில்செல்வம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.08.2001) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

சிவகுரு வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
மனைவி, பிள்ளைகள்.
(91261)

# மனதைக் கவர்ந்த மாச்சீனி அலங்காரம்!

யாழ்.அம்மன் வீதியிலிருந்த அந்த வீட்டிற்குள் நுழைந்தோம். அழகிய தேவதை ஒருத்தி வரவேற்றாள். அவளின் அழகில் மயங்கி அப்படியே அவளைக் கடித்துத் தின்றுவிடலாம் போல் இருந்தது.

"கவலைப்படாதீர்கள், நீங்கள் விரும்பியது நடக்கக் கூடியதுதான்".

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தோம்.

சிரித்தபடி நின்று கொண்டிருந்தார் நிர்வாகி யோகி ஹோம் சயன்ஸ் அககடமியின் நிர்வாகி திருமதி யோகி.


இனிக்கும் பூக்கள்

அப்போதுதான் ஞாபகம் வந்தது நாம் நின்றிருப்பது யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி நடத்திய கேக் அலங்காரக் கண்காட்சி என்று.

அசடுவழியச் சிரித்தபடி, மீண்டும் கேக் தேவதையைப் பார்த்தோம். ஆம், அந்தப் பிறந்தநாள் கேக் மீது ஒரு தேவதை அமர்ந்திருப்பது போல அவ்வளவு தத்ரூபமாக 'ஐசிங்கால்' அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பிரமிப்பு நீங்காமல் நகர்ந்தோம்.

யோகியின் மாணவிகளின் கற்பனையிலும், விரல்களின் லாவகத்தாலும் உருவான கேக் அலங்காரங்கள்... விழிகளை விரிய வைத்தன.

விரல்கள் இசை மீட்டத் துடித்திடும் பியானோ -

தேன் தேடி வந்த தேனீக்களை ஏமாற்றிய பூக்கள் -

மடியில் தூக்கி வைத்துக் கொஞ்சத் தூண்டும் முயல் -

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அத்தனையும் மாச்சீனி, மா, உணவு வர்ணம் என்பவற்றை இணைத்து, தங்களின் எண்ணங்களை உருவமாக்கிய மாணவிகளின் கைவண்ணங்களே.


வசிக்க முடியாது - ஆனால் ருசிக்க முடியும்.

யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி நடத்தும் நான்காவது கேக் அலங்காரக் கண்காட்சி இது.

கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அலங்காரக் கேக்குகளும் ஒவ்வொரு மாணவியினதும் தனித்திறமை.

இதற்கு ஆணிவேரான திருமதி யோகியை மாணவிகளிடையே இருந்து சற்று ஓரம் கட்டினோம்.

"கேக் அலங்காரம் வெறும் சமயலறைச் சமாச்சாரம் தானே?" நாம் கேட்டோம். நம் அசட்டுக் கேள்வி அவருக்கு சிரிப்பை வரவழைத்தது.

"என்னிடம் கேக் அலங்காரம் பயின்ற மாணவிகள் இன்று யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல கொழும்பிலும், வெளிநாடுகளிலும் இதன் மூலம் நன்கு சம்பாதிக்கிறார்கள் தெரியுமா?"

**மதுமிதா**

எதிர்க் கேள்வி போட்டார் அவர். உண்மைதான், இன்று ஒரு பெண்ணுக்குத் திருமணப் பேச்சு ஆரம்பிக்கும் போதே, யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமியில் அந்தப் பெண் கேக் அலங்காரம், அழகுக் கலை என்று பழக ஆரம்பித்துவிடுவதாக பார்வையாளர்கள் பேசிக்கொண்டார்கள்.

வெளிநாடுகளிலிருந்து இங்கு வரும் நம் பெண்கள் கூட, துணியில் வர்ணம் தீட்டுதல், அழகுக்கலை, கேக் அலங்காரம் என்று பலவற்றையும் கற்றுக்கொண்டு வெளிநாடு சென்று இவற்றால் பணம் மட்டுமன்றி புகழையும் பெற்று விடுகிறார்களாம்.


மணவிழா ஸ்பெஷல்

"குடாநாட்டின் இன்றைய நிலைமையில் ஒரு கேக்குக்காக ஆயிரம், இரண்டாயிரம் செலவழிப்பவர்கள் இருக்கிறார்களா? "

நேரிடையாகப் பதில் சொல்லாமல் "இந்தக் கேக் எவ்வளவு தெரியுமா?" கேட்டார் திருமதி யோகி.

எமது கஞ்சப் புத்தி 'இரண்டாயிரம்' என்றது.

புன்சிரிப்புடன் சொன்னார் அவர் "ஐயாயிரம் ரூபா. இன்று பிறந்தநாள், பதிவுத் திருமணம் என்று எதுவானாலும் அலங்கரிக்கப் பட்ட கேக் தனியிடத்தை வகிக்கும் வழக்கம் குடாநாட்டில் ஏற்பட்டுவிட்டது. ஆகவே எனது மாணவிகள் கேக் அலங்காரத்தால் வீட்டில் இருந்து கொண்டே உழைக்கிறார்கள். வெளிநாடுகளுக்குச் சென்ற எனது மாணவிகள், கடிதம் எழுதும்போது, 'உங்களிடம் கற்றுக் கொண்ட மனையியலால் மனம் நிறைவாக உழைத்து மகிழ்வாக வாழ்கின்றோம்' என்று எழுதும் போது இந்தத் துறையின் மீது மேலும் ஆர்வம் அதிகரிக்கின்றது." கண்கள் பனிக்கச் சொன்னார் திருமதி யோகி.

## 'யோகி ஹோம் சயன்ஸ்' அக்கடமியின் கேக் கண்காட்சி – ஒரு பார்வை

அங்கிருந்த கேக் அலங்காரங்கள் தனது மாணவிகளைப் பற்றி அவர் பெருமைப்படுவது நியாயம்தான் என்பதை உணர்த்தின. "கேக் அலங்காரம் பழக தனித் திறமை தேவையா? " கேட்டோம்.

"எதுவுமில்லை; கொஞ்சம் ஆர்வம், கொஞ்சம் பொறுமை, கொஞ்சம் கற்பனை, அத்துடன் கொஞ்சம் பணம் இவை போதும். யார் வேண்டுமானாலும் இதில் நிபுணத்துவம் அடையலாம்" - என்றார் திருமதி யோகி.


அள்ளித் தின்னும் அழகு

பணம் பிரச்சினையில்லை. ஆனால் மற்ற மூன்றும் இடித்தன. ஆகவே, அலங்கரிக்கப்பட்ட கேக்கை ரசித்து உண்பதோடு நின்று கொள்ளத் தீர்மானித்தோம்.

"இந்தக் கேக் அலங்காரக் கண்காட்சி எப்போது முடியும்? " கேட்டது நாம். "எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி வரை இந்தக் கண்காட்சி நடக்கும்" என்ற திருமதி யோகி, "ஏன் கேட்கிறீர்கள்? " என்றார்.

"ஒன்றுமில்லை, கண்காட்சி முடிந்ததும் இந்தக் கேக்குகளை எல்லாம் வெட்டிச் சாப்பிடுவீர்கள். அப்போது வந்தால்....." சொல்லியபடியே வெளியேறினோம்.

'அற்பம்' மாணவிகள் கும்பலிலிருந்து குரல் கேட்டது.


'யோகி ஹோம் சயன்ஸ்' அக்கடமி நடத்தும் கேக் அலங்காரக்கண்காட்சியை நேற்று திறந்து வைத்து யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, அக்கடமி நிர்வாகிகளுடன் கண்காட்சியைப் பார்வையிட்டார். அந்தச் சமயத்தில் எடுத்த படம் இது. (ஒ)


நியந்த்ரீ

வழங்கும்

**கலைக் கண்காட்சி**

இசை நடனக் களஞ்சிய நூலின் ஆசிரியர்

அமரர் கானப்பிரியா பிரம்மஸ்ரீ **எஸ்.என்.நடராஜஐயர்**

அவர்களின் கலைத்தொகுப்புக்களின் கண்காட்சி.

*இடம்:* நல்லூர் சிவன்கோயில் முன்பாக உள்ள மண்டபம்.

*காலம்:* 16.08.2001 - 19.08.2001

இந்நிகழ்வினை

பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயர்

(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம் - நியந்த்ரீ)

அவர்கள் இன்று பிற்பகல் 5.00 மணிக்கு ஆரம்பித்து வைப்பார்கள்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சிவன்கோயில்,*
*நல்லூர்.* (C/17884) - நியந்த்ரீ.



**துயர் பகிர்கின்றோம்**

*சித்தமருத்துவத்துறையின் பழைய மாணவியாகவும் முன்னாள் தற்காலிக விரிவுரையாளராகவும், சாவகச்சேரி பிரதேச சபையின் ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தராகவும் கடமையாற்றிய*

**திருமதி Dr.சற்குணதேவி திருக்குமார்**

*அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து துயரில் நாமும் பங்கேற்கின்றோம்.*

சித்தமருத்துவத்துறை மாணவர் ஒன்றியம்,
*யாழ்ப்பாணம்.* (91253)



**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்**

***சகல வர்த்தகர்களுக்குமான அன்பான வேண்டுகோள்***

நாளை (17-08-2001) வெள்ளிக்கக்கிழமை நடைபெறும் நல்லூர் தேர்த்திருவிழாவுக்கு வர்த்தக ஊழியர்கள் செல்வதற்கு வசதியாக சகல வர்த்தக நிலையங்களையும் அத்தினத்தில் பூட்டி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*165, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* **யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.**
(C/17877)



**நல்லூர் ப.நோ.கூ.சங்கம்**

**பதவி வெற்றிடம்**

கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு 18 - 45 வயதுக்குட்பட்ட தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**விற்பனை முகாமையாளர் - 208/15**

*சம்பளம்: 3,500 - 65 x10 - 70 x10 - 4,850*

*தகைமைகள்:*

அ) கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் 16 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளரின் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) பத்திரம்/க.பொ.த. (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம் /தூயகணிதம் /சிங்களம் /தமிழ்ப்பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களிலான சித்தி.

சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வாகன சுத்திகரிப்பாளர் - 314/16**

*சம்பளம்: 3,250 - 60x10 - 65X10 - 4,500*

*தகைமைகள்:*

அ) கூ.ச.ஊழியர் 17 ஆம் சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவம். அல்லது

5 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழுடன் நல்ல தேகாரோக்கியத்துடன் இருத்தலும்.

☆ விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் ரூபா 5/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

☆ கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்கத்தால் கோரப்படும் பிணை செலுத்தல் வேண்டும்.

☆ விண்ணப்பங்கள் "பொது முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ. சங்கம், திருநெல்வேலி" என்ற முகவரியிட்டு 31-08-2001ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும் தகுதியற்ற விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

பொது முகாமையாளர்,
நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.
(C/17882)


# தேயிலை ஏற்றுமதியில் பெருவீழ்ச்சி ஏற்படும் நிலை குறித்து எச்சரிக்கை

கொழும்பு,ஓக.16

கட்டுநாயக்காத் தாக்குதலை அடுத்து எழுந்துள்ள நெருக்கடி நிலையினால் தேயிலை ஏற்றுமதி வெகுவாகப் பாதிக்கும் என்று பெருந்தோட்ட உரிமையாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கப்பல் காப்புறுதிக் கட்டணம் வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளதனால் தேயிலையை ஏற்றுமதி செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் தேயிலைக்கு போட்டிச் சந்தை நிலவும் வேளையில் அதனை அதிக விலைக்கு விற்கமுடியாத நிலை காணப்படுவதாகவும் பெருந்தோட்ட உரிமையாளர் சங்கம் கவலை தெரிவித்திருக்கின்றது.

இந்த நிலைமையினால் நாட்டிற்குக் கிடைக்கும் கோடிக்கணக்கான அந்நியச் செலாவணி வீழ்ச்சியடையும் அபாயம் உண்டு என்றும் -

பெருந்தொகையான தேயிலையை ஏற்றுமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் பெருந்தோட்ட உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் எஸ்.கே.செனவிரத்ன தெரிவித்திருக்கின்றார்.

(க-9)

## 'அருள் சுரபி' நாளை வெளியீடு

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் ஆதரவுடனான 'அருள் சுரபி' இந்து சமய காலாண்டுப் பத்திரிகை வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத்தின் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் இடம் பெறவுளது. (க-10-173)

## திருமுறை மன்ற பண்ணிசைக் கோஷ்டி

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வருடந்தோறும் நடத்தி வருகின்ற தேவாரப் பண்ணிசைக் கோஷ்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 7 மணியளவில் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள முத்தவிநாயகர் ஆலயத்தில் இருந்து புறப்படவுள்ளது. (க-10)

## மிதிவெடியால் கால் இழப்பு

இராணுவத்தினால் கைவிடப்பட்ட காவரலண் பகுதிக்குள் குழை வெட்டச் சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டு தனது இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்து படுகாயம் அடைந்தார். யாழ்.தட்டாதெருச் சந்திப் பகுதியில் நேற்று மாலை 4மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் காக்கைதீவு மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த சிங்கராசா கிருஷ்ணபவான் (வயது35) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ம-15)

**நாகம்ஸ் சுன்னாகம்**

வேணு, ரோஜா (இரட்டை வேடம்)
நடித்த

**பொட்டு அம்மன்**

(ரீல்ஸ்)
பேய்களின் அட்டகாசம் நிறைந்த படம்
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்) (91255)

**ராஜா யாழ்ப்பாணம்**

(C/17875)
இளைய தளபதி விஜய்,
தேவயானி, சூர்யா,
நடிப்பில

**ப்ரண்ட்ஸ்**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)

**அநேகரின் வேண்டுகோளுக்கமைய இன்று வெளியாகின்றது!**



**G.C.E. A/L**

பொதுச் சாதாரணப் பரீட்சை வழிகாட்டி நூல்

முற்றிலும் எதிர்பார்க்கையுடனான பொது விழிப்பு விடயங்கள் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, 2000 Aug. வினாத்தாள்களுடன் கொழும்பில் வெளியிடப்பட்ட முன்மாதிரி வினாத்தாள்கள் உட்பட 5 மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்.

ஆக்கியோர்:
P. உமாசங்கர் & P. கமலதாசன்

சொற்பபிரதிகளே உள்ளன.

கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, சுப்பிரமணியம், துர்க்கா புத்தகசாலைகள் (91259)




**நன்றியுடன் பாராட்டுகின்றோம்**

**புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலய**


புனரமைப்பு வேலைக்காக நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியமைக்காக,



மாண்புமிகு அமைச்சரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
செயலாளருமாகிய
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



யாழ்.நாடாளுமன்ற உறுப்பினரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய
கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்



தீவக வளர்ச்சிக்காக
அரும்பாடுபட்டு செயற்பட்டுவரும்
ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
தீவக அமைப்பாளரும்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய
**உயர்திரு. ந.மதனராஜா**
அவர்களுக்கும்

எமது மனப்பூர்வமான
நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.
**- ஆலய பரிபாலன சபையினர்.** (91257)


## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.16

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தையொட்டி ஆலயச் சூழலில் தினமும் நடைபெற்றுவரும் நிகழ்வுகளில் சப்பரத் திருவிழாவான இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதினத்தில் அதிகாலை 5 மணிமுதல் திருமுறை வீதிப்பஜனை. குருமூர்த்த ஆலயத்தில் காலை 7 மணிக்கு விசேட பூஜை. காலை 9.30 மணி முதல் 12.30 மணிவரையும் பிற்பகல் 3.00 மணிமுதல் 4.30 மணிவரையும் 'கந்தபுராணம்' புராணபடனம்.

☆ ☆ ☆

நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் மாலை 6 மணிக்கு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை.நித்தியானந்தசர்மாவின் கம்பராமாயணச் சொற்பொழிவில் 'வாலிவதம்'

☆ ☆ ☆

இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மாலை 6 மணிக்கு துர்க்கா மணிமண்டபத்தில் தெய்வீக இசையரங்கில் ஆர்.இராதாகிருஷ்ணனின் வயலின் இசை.

☆ ☆ ☆

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கம்பன் கழகத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனின் பெரியபுராணம் சொற்பொழிவு.

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் பிற்பகல் 2 மணி முதல் இடம்பெறும் திருமுறைப் பாராயணம் சொற்பொழிவுத் தொடரில் - 63 நாயன்மார் குருபூசை மடத்தில் சங்கீதரத்னம் இ.ஸ்ரீரங்கநாயகியின் பண்ணிசை. புலவர் மு.திருநாவுக்கரசுவின் சொற்பொழிவு.

கிழக்கு வீதி மனோன்மணி அம்மன் ஆலயத்தில் பிரம்மஸ்ரீ சிவராஜ சர்மாவின் கந்தபுராணச் சொற்பொழிவு.

(ஐ-17-86)

## இரசாயன பொருள்களை பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் கற்பித்தல் செயற்பாடுகளுக்குத் தேவையான ஆய்வுகூட இரசாயனங்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஒழுங்குகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ச.நா.தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் பாடசாலை ரீதியாகத் தேவைப்படுகின்ற இரசாயனப் பொருள்களின் விவரத்தை 3 பிரதிகளில் தயாரித்து எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்பு தனக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

(ஐ-10)

### தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள

## கைதிகளைப் பார்வையிட உறவினர் நேரில் வரலாம் என புலிகள் அறிவிப்பு

கொழும்பு,ஓக.16

தமது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளைப் பார்வையிட வேண்டுமாயின் அவர்களது உறவினர்கள் வன்னிக்கு நேரடியாக வரமுடியும் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை -

மடு மாதா உற்சவத்திற்குச் செல்லும் பயணத்தில் கைதிகளைப் பார்வையிட வரவேண்டாம் என்றும் சமாதானத்துக்கான பெற்றோர் அமைப்புக்குப் புலிகள் அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகத்தில் இருந்து ஈ.மெயில் மூலம் இந்தத் தகவல் தங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக அமைப்பின் தலைவர் கப்டன் ஜானக தேனுவர தெரிவித்தார்.

கைதிகளைப் பார்வையிடும் நோக்கில் வன்னிக்கு வரும் உறவினர்களை வரவேற்பதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் புலிகள் அந்த அறிவித்தலில் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

புலிகளின் இந்த அறிவித்தலை அடுத்து, கைதிகளைப் பார்வையிடும் நோக்கில் மடு மாதா உற்சவத்துக்குச் செல்ல இருந்த தமது திட்டத்தைத் தாம் கைவிட்டுள்ளதாகவும் -

கைதிகளைப் பார்வையிடச் செல்வதற்காகப் பயணப் பாதுகாப்பு அனுமதிக்கு விண்ணப்பிக்க உள்ளதாகவும் - அவர் மேலும் சொன்னார்.(ம)

## 35 தொண்டர் ஆசிரியருக்கு விரைவில் நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கென அண்மையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களில் 35 பேருக்கு விரைவில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. ஏனையவர்களுக்குப் படிப்படியாக நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டத்தில் உரையாற்றிய வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

தற்பொழுது பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் அதிவிசேட சித்தி (D) இருக்க வேண்டும் எனவும் அவ்வாறு இல்லையேல் அவர்கள் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள பரீட்சையில் தோற்றி விசேட சித்திபெற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-10)

### பாதுகாப்பு அமைச்சு அனுமதி கிடைக்காததால்

## நீதிமன்றால் விடுவிக்கப்பட்ட இருவர் தொடர்ந்தும் சிறையில்

### சொந்த இடத்துக்குச் செல்லமுடியாத நிலை

யாழ்ப்பாணம்,ஓக.16

நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட இருவரை திருகோணமலையிலிருந்து வன்னிக்கு அழைத்துச் செல்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்காததால் அவர்கள் தொடர்ந்தும் யாழ்.சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்தமாதம் 31ஆம் திகதி சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின்படி தோமஸ் ராஜ்குமார் அல்லது ராமு (கஞ்சிலைமடு, புதுக்குடியிருப்பு) என்ற இளைஞனும் -

கடந்த மாதம் 12ஆம் திகதி கிளிநொச்சி, அக்கராயன் குளத்தைச் சேர்ந்த இராமசாமி ரேனுகா என்ற யுவதியும் - யாழ்.நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்ததையும், இவர்களின் உறவினர்களோ இவர்களைப் பொறுப்பேற்கக் கூடியவர்களோ குடாநாட்டில் இல்லாததையும் கவனத்தில் எடுத்த நீதிபதி குறித்த இருவரையும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பாதுகாப்புடன் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்று சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதன்படி சர்வதேச செஞ்சிலுவைக் குழுவுக்கும், இராணுவ அதிகாரிகளுக்கும் யாழ்.நீதிவான் நீதிமன்றப் பதிவாளரால் கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டன.

இவர்கள் இருவரையும் யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கு அழைத்துச் செல்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்துள்ள போதிலும் திருகோணமலையில் இருந்து வன்னிக்கு அழைத்துச் செல்வதற்கான அனுமதி கிடைக்கவில்லை என்று சர்வதேச செஞ்சிலுவைக்குழு நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

இதனால் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட மேற்படி இருவரும் தொடர்ந்தும் சிறைச்சாலையிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர்

(ம-6)

## வர்த்தக நிலையங்கள் நாளை மூடப்படும்

யாழ்ப்பாணம்,ஓக,15

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் நல்லூர் கந்தசுவாமி கோயில் இரதோற்சவத்தை ஒட்டி வர்த்தக நிறுவனங்கள் நாளை மூடப்பட்டிருக்கும் என்று யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

தேர்த்திருவிழாவுக்கு வர்த்தக ஊழியர்கள் செல்ல வசதியாக சகல வர்த்தக நிறுவனங்களையும் நாளை மூடுமாறு வர்த்தக நிறுவன உரிமையாளர்களை வணிகர் கழகம் கேட்டிருக்கிறது. (ஐ)


விராட் விஸ்வப் பிரம்மனே நம

**63ஆவது பிறந்தநாள் நினைவும்**
**85ஆவது நாள் நினைவஞ்சலியும்**

கலாபூஷணம் சிற்பச் சக்கரவர்த்தி

**ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியார்**

தோற்றம் 16.08.1938 மறைவு 24.05.2001



தேர்க் கலை அரசாய் வாழ்ந்து
திக்கெல்லாம் புகழ் பரப்பி
ஊர்க்கெலாம் உதவி வாழ்ந்த
உத்தம, கலையின் வேந்தே!
இன்றுங்கள் பிறந்தநாள்.....
எழு பிறப்பிலும் உங்கள்
நினைவுகள் தொடரும்.....
உங்கள்
பணிகளும் தொடரும்....

ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி. (91260) மனைவி, மக்கள்.



## மரண அறிவித்தல்

### சிவசம்பு பூலோகசிங்கம்

யாழ்ப்பாணம் ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற விவசாய திணைக்கள லிகிதர் சிவசம்பு பூலோகசிங்கம் நேற்று (15.08.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ராசநாயகியின் அன்புக் கணவரும் சிவசிதம்பரம், சிவானந்தன் (சங்கானை பல நோ.கூ.சங்கம்), சிவபாலன் (உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், திருநெல்வேலி), சிவகுமாரன் (உபதபால் அதிபர், சித்தன்கேணி), டாக்டர் சிவகாமசுந்தரி (போதனா வைத்தியசாலை, கொழும்பு), சிவநேசன் (பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாரதா, ரசினா, சந்திரலேகா, உதயகுமாரன் (குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜயறுாகவன், ஞானருபன், லாவண்யன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2001) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதர் சங்க ஒழுங்கை,
சித்தன்கேணி.
(C/17886)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## பழிவாங்கும் வகையில்
# மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்தும் விமானத் தாக்குதல்களை நிறுத்துங்கள்
## செல்லச்சாமி எம்.பி. ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு,ஓக.16

கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதலுக்குப் பழிவாங்கும் நோக்குடன் வடக்கில் மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்டுவரும் விமானத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.செல்லச்சாமி ஜனாதிபதிக்கு 'பக்ஸ்' மூலம் அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விமான நிலையம் மீது புலிகள் நடத்திய தாக்குதலுக்காக பொது மக்கள் மீது தாக்குதல் நடத்துவது கண்டனத்துக்குரியது.

சமாதானத்தை உடனடியாக ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வதை விடுத்து, அழிவு நடவடிக்கையில் ஈடுபடுவது யுத்தத்தை மேலும் தீவிரமாக்கவே வழிவகுக்கும்.

எனவே உடனடியாக யுத்தத்தையும் பொதுமக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்களையும் நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பியுங்கள் - என்றுள்ளது.

(ம-4)

### பிணைப் பணம் செலுத்த முடியாமையால் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.16

மண்டைதீவுப் பகுதியில் குடும்பப் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கடற்படைச் சிப்பாயை 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி சு.பா.சுப்பிரமணியம் அனுமதி அளித்தார்.

மண்டைதீவு முகாமில் கடமையாற்றிய நிமால் பிரியந்த என்ற பத்தேகமவைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாயையே நீதிபதி பிணையில் செல்ல அனுமதித்தார்.

எனினும் பிணைப் பணத்தைச் செலுத்த முடியாமல் இருப்பதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து அவரை ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியலிலேயே வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.(ம-6)

### மிதிவெடியில் கால் இழப்பு

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் படையினர் கைவிட்டுச் சென்ற பகுதியில் நேற்றுக்காலை மிதிவெடியில் சிக்கி தர்மராஜா விஜயகுமார் (வயது22) என்ற இளைஞர் வலது காலை இழந்தார். (உ-164)

### இரு படையினர் காயம்

யாழ்ப்பாணம்,ஓக.16

முகமாலையிலுள்ள இராணுவ முன்னரங்க நிலைகள் மீது கடந்த 13ஆம் திகதி மாலை 7மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார் என விசேட ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது.

அதேவேளை கிளாலிக்கு தெற்கேயுள்ள கரடியன்காடுப் பகுதியில் உள்ள படையினர் மீது நேற்று முன்தினம் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் மற்றுமொரு சிப்பாய் காயமடைந்ததாக ஊடகத் தகவல் மையம் மேலும் தெரிவித்தது.(ம-4)

### பொ.ஐ.மு. நாடாளுமன்ற கூட்டம் நாளை

கொழும்பு,ஓக.16

பொ.ஐ.முன்னணியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் -

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ஜே.வி.பி. முன்வைத்துள்ள 'தகுதி காண்' அரசு குறித்து ஆராயப்பட உள்ளதாக பொ.ஐ.முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-4)

---

### நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு முருகப்பெருமான் இரதத்திற்கு எழுந்தருளுவார். காலை 8 மணிக்கு தேர்ப்பவனி ஆரம்பமாகும்.

நல்லூர் கந்தன் இரதோற்சவத்தை பக்திபூர்வமாக நடத்த சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

---

### ரூபவாஹினி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டதால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மக்கள் மத்தியில் பெரும் பீதி காணப்பட்டது.

இந்த ஒத்திகை காரணமாக குறிப்பிட்ட பகுதிக்குள் நேற்று முன்தினம் மாலையிலிருந்து நேற்றுக் காலை வரை வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

(ம-4)

---

### ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகின்றது.

எது, எப்படியிருப்பினும் தனது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கட்டுப்பாட்டில் உள்ள அரசை, இப்போதைக்கு - இலகுவாக - எதிர்த்தரப்பிடம் கையளிக்க இடமளிப்பதில்லை என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் -

இன்று அமைச்சரவைக் கூட்டத்தையும் -

நாளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தையும் - ஜனாதிபதி கூட்டியுள்ளார்.

தமது முடிவு குறித்து இக்கூட்டங்களில் சூசகமாகவேனும் ஜனாதிபதி தகவல்களை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்பு செய்தி வட்டாரங்கள் கருதுகின்றன. (உ)


**KONICA COLOUR LAB**



★ உங்கள் இல்லங்களில் நிகழும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு வீடியோப் படம், கலர்ப்போட்டோ பிடித்திட வேண்டுமா?

★ உங்கள் படங்களை நேரடியாக பலகைகளில் பிறிண்ட் செய்துகொள்ள வேண்டுமா

★ அழகிய முறையில் அல்பம் தயாரிக்கவேண்டுமா?

★ உங்கள் மறக்கமுடியாத நிகழ்வுகளை வீடியோக்சட் நாடாவில் இருந்து CDயில் பதிவு செய்து பலநூற்றாண்டுகள் பாதுகாக்க வேண்டுமா?

★ நினைவை விட்டகலாத நிகழ்வுகளின் கலர், கறுப்பு வெள்ளைப் பட பிரதிகளை DURO GUARD முறையில் பிரதி பண்ண வேண்டுமா?

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

**கொனிகா கலர் லாப்**

14,ஸ்ரீ வெங்கடேசன் வீதி (பெருமாள் கோயிலருகில்)

யாழ்ப்பாணம். T.P.3493

(C/17883)



**தவறிவிட்டது**

நாவலடி, உடுப்பிட்டியைச் சேர்ந்த கந்தசாமி சுவர்ணலதா என்பவருடைய தே.அடையாள அ. (இல.757683113V), விசேட அ.அ., பாஸ் என்பன புத்தூருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

கந்தசாமி சுவர்ணலதா,
இத்தியோடை,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(91254)


## சுதந்திரக் கட்சியின் பொன்விழா

கொழும்பு,ஓக.16

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆரம்பிக்கப்பட்டு 50 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு கட்சியின் பொன்விழா எதிர்வரும் செப்ரம்பர் மாதம் 2ஆம் திகதி கொழும்பு டீ.ஆர்.சி. மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சார்க் நாடுகளின் பிரதிநிதிகள் உட்பட பல நாடுகளில் இருந்து வரும் முக்கிய பிரமுகர்கள் இந்த விழாவில் கலந்துகொள்ளவுள்ளனர்.

பொன்விழா ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 4மணிக்கு மகாவலி நிலையத்தில் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும்.

அதேவேளை ஸ்ரீலங்கா அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள புதிய அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான கருத்தரங்கு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி கொழும்பு குதிரைப்பந்தய திடலில் நடைபெறவுள்ளது.

(க-9)

## அரசைப் பதவி விலகக்கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக.16

பொ.ஐ.முன்னணி அரசாங்கம் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று கோரி ஐ.தே.கட்சி ஏற்பாட்டில் கொழும்பு ஆமர் வீதியில் நேற்று மாலை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களை அவர்கள் எழுப்பினர்.

நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்படும்வரை இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் -

இத்தகைய ஆர்ப்பாட்டங்களில் அதிகளவான மக்கள் கலந்துகொள்வது அரசாங்கத்தின் மீது அவர்களுக்குள்ள வெறுப்பையே காட்டுகிறது என்றும் -

ஐ.தே.கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ம-4)

## அரசுக்கு எதிராகச் செயற்படும் அமைச்சர்கள் மீது நடவடிக்கை
### ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு,ஓக.16

அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்பட்டுவரும் அமைச்சர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

எதிர்க்கட்சிக்குத் தாவக்கூடும் என எதிர்பார்க்கப்படும் சில அமைச்சர்களை இலக்குவைத்தே ஜனாதிபதி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார் எனக் கருதப்படுகின்றது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்கா, வனவள சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த விஜயசேகர ஆகியோர் மீதே நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

ஜனாதிபதி நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதி அமைச்சர்களைச் சந்தித்து நாட்டின் தற்போதைய அரசியல் நிலை குறித்து ஆராய்ந்துள்ளார். (ம-4)

---

### கட்டுநாயக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுநாயக்காத் தாக்குதல் இடம்பெற்ற உடனேயே அதுகுறித்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சின் செயலர் சந்திரானந்த டி சில்வா தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழு தனது அறிக்கையை மூன்று வாரங்களுக்குள் சமர்ப்பிக்கும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இதற்கு மேலதிகமாகவே ஜனாதிபதி இந்த விசேட குழுவை நியமித்துள்ளார்.

(ம)

---

### கட்டுநாயக்காத் தாக்குதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதாந்தம் சுமார் 270 கப்பல்கள் வந்து செல்லும் இவற்றில் 60 கப்பல்கள் நீண்ட நாள்கள் துறைமுகத் தில் தங்கி நிற்பவை.

கட்டுநாயக்கா தாக்குதலின் பின்னர் இந்த எண்ணிக்கை பெருமளவு வீழ்ச்சி அடைந்துள்ளது. அதிகமான கப்பல் நிறுவனங்கள் தங்கள் கப்பல்களை கொழும்புத் துறைமுகத்தில் தரிக்காமல் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளன. துறைமுகம் நோக்கி வந்து கொண்டிருந்த சில கப்பல்கள் காப்புறுதித் தொகை அதிகரிப்பை அடுத்து புறப்பட்ட இடத்துக்கே திரும்பிச் சென்றுவிட்டன.

இதேவேளை -

இலங்கை வரும் கப்பல்களில் 75சதவீதமானவை மீள் ஏற்றுமதியுடன் தொடர்புடையவை. அதாவது மூலப் பொருள்களாக இலங்கைக்கு வருபவற்றை முடிவுப் பொருள்களாக ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்துடன் தொடர்புடையவை. கொழும்புத் துறைமுகத்துக்கு கப்பல்கள் வரவில்லை எனின் இந்த ஏற்றுமதி வர்த்தகம் மிக மோசமாகப் பாதிக்கப்படும்.

இதனால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவு அதிகரிக்கும்; பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்படும்; பணவீக்கம் அதிகரிக்கும்.

எனவே இந்த விடயத்துக்கு உடனடித் தீர்வு காணப்படவேண்டும். ஆனால் கட்டுநாயக்காத் தாக்குதல் தொடர்பாக ஏற்பட்டுள்ள இந்த நிலைமை தொடர்பாக ஜனாதிபதி இந்த நிமிடம்வரை - பத்திரிகையாளர் மாநாடு இடம்பெறும்வரை - எந்த விதக் கவனமும் செலுத்தவில்லை.

நாட்டை மிக மோசமாகப் பாதிக்கக் கூடிய விவகாரம் குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தாமல் இருப்பது எமக்குக் கவலை அளிக்கிறது. இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் இதுவரை அமைச்சர் றொனி டி மெல் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறார். ஆனால் அவரால் இதற்குத் தீர்வு காணமுடியாது.

ஜனாதிபதியால் மட்டுமே இதற்குத் தீர்வு காணமுடியும். எனவே இந்த விடயத்தில் ஜனாதிபதி உடனடியாகத் தலையிட்டு பிரச்சினைக்கு ஒரு சுமுகத் தீர்வைக் காணவேண்டும். இல்லையெனில் நாடு மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளப்படுவதைத் தவிர்க்க முடியாது - என்றார். (ம)


324,பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

**இலவச கணனிப்பயிற்சி**

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச திணைக்களங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனத்தினர் A/L பரீட்சையை நிறைவுசெய்யும் மாணவர்களுக்காக விசேட கணனிப்பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்.

ஆரம்பம்: 07/09/2001 (C/17876) 50 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.



**A/L 2001 பொது ஆங்கிலம்**




பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடு செய்யப்பட்ட முற்றிலும் எதிர்பார்க்கப்படும் மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்.

தொகுப்பு: த.தனேந்திரன்
(B.Com. (Hons) m.m.Spl,H.N.Dip.in Acc.

அனைத்து புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

வெளியீடு: I.P.E. SRILANKA சொற்ப பிரதிகளே உள்ளன

(91263)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.